



30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com






நதி: 30 பாலம்: 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் June 15, 2020

# கனடாவில் கோவிட்-19இன் வேகம் தணிகிறது!

கோவிட்-19 தொற்றுநோய்ப் பரம்பலின் வேகம் கனடாவில் தற்போது குறையத் தொடங்கியுள்ளது. ஆனாலும் பொது மக்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லா தோரிடம் இருந்து இரண்டு மீற்றர் இடை வெளியைப் பேணுதல் மற்றும் அடிக்கடி கை கழுவுதல் போன்ற இலகுவான சாதாரண சுகாதார முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன்மூலம் இவ்வருட இலையுதிர் காலத்தில் மீண்டும் வரலாம் என எதிர் பார்க்கப்படும் கோவிட்-19 தொற்று நோயின் இன்னொரு அலையைத் தவிர்க் கலாம் அல்லது அவ்வாறு தவிர்க்க முடியா விட்டாலும் அந்த அலையின் வேகத்தைக் குறைத்துப் பாதிப்பைக் குறைக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கோவிட்-19 தொற்று நோய் பரம்பலின் வேகம் கனடாவில் தணியத் தொடங்கினா லும் அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் தினமும் கணிசமானோர் இந்த நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுவரை கோவிட்-19 தொற்று நோயால் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்ட 8 மில்லியன் மக்களில் இறந்த 5.5% ஆனோர் தவிர ஏனையோரில் 50%இற்கு மேற்பட்டோர் குணமடைந்து விட்டனர்.

கனடாவைப் பொறுத்தமட்டில் கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒரு லட்சம் மக்களில் இறந்த 8 ஆயிரம் பேர்களைத் தவிர ஏனையோரில் 65%இற்கு மேற்பட்டோர் குணமடைந்து விட்டனர். கனடாவில் தற்போது கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டுக் குணமடையாமல் இருப்போரின் எண்ணிக்கை 31 ஆயிரம் பேர் அளவில் இருப்பதுடன் அதுவும் நாளாந்தம் குறைந்துகொண்டு வருகிறது. இது தினமும் நோயினால் பாதிக்கப்பட்டோரை விட குணமடைவோர் அதிகம் என்பதைக் காட்டுகின்றது.



கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப் பட்டுக் கனடாவில் இன்னமும் குணமடை யாமல் இருக்கும் 31ஆயிரம் பேரில் 27 ஆயிரம் பேர் குவிபெக் மாகாணத்திலும் 3 ஆயிரம் பேர் ஒன்ராரியோ மாகாணத்திலும் இருக்கின்றனர். மீதமுள்ள ஆயிரம் பேர் கனடாவின் ஏனைய ஏழு மாகாணங்கள் முழுவதிலும் இருக்கின்றனர். பிரின்ஸ் எட்வேட் தீவுகள் மாகாணத்திலும் மற்றும் மூன்று பிரதேசங்களிலும் இந்நோய் உள்ளோர் ஒருவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராரியோ மாகாணத்தில் கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டோர் 3 ஆயிரம் பேர் வரையில் மட்டுமே உள்ள தாலும், தினமும் இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 200 அளவில் உள்ளதாலும் மாகாண அரசு படிப்படியாக வணிக நிலையங்கள், சேவை நிறுவனங்கள் மற்றும் பூங்காக்கள் என்பவற்றை மக்களின் பாவனைக்காகத் திறக்க அனுமதித்து வருகிறது.

ஒன்ராரியோ மாகாணத்தில் இந்நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு மாகாண முதல்வர் Doug Ford அவர்கள் இந்நோய் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தனது நேரடிக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதும் ஒரு காரண மென ஊடகவியலாளர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. ஒன்ராரியோ மாகாணத் தைப் பொறுத்தவரையில் முதியோர் பராமரிப்பு இல்லங்களில்தான் இந்நோயின் பாதிப்பு அதிகமாக இருந்தது. மற்றைய இடங்களில் இதன் பாதிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்து வருகிறது.

ஒன்ராரியோ மாகாண முதல்வரின் தொடர் அழுத்தத்தால் ஒன்ராரியோ மாகாணத்தில் தினமும் கோவிட்-19 தொற்று நோய் தொடர்பாகப் பரிசோதனை செய்யப்படு வோரின் எண்ணிக்கை 28 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. மாகாண மக்களைப் பரிசோதனை செய்து நோய் உள்ளோரைத் தனிமைப் படுத்துவதன் மூலமே இந்நோய்த் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர். கனடாவில் ஒன்ராரியோ மாகாணம் ஒன்பது இலட்சம் பேரை ஏற்கனவே பரிசோதனை செய்துள்ளது. ஒன்ராரியோ மாகாணத்திற்கு அடுத்ததாக குவிபெக் மாகாணம் 5 லட்சம் பேரைப் பரிசோதனை செய்துள்ளது.

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)



































# கயிலாய மான்சரோவர் புனித பயணம் – புதிய பாதையில்

இந்து புராணங்களில் சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியின் பரலோக இருப்பிடமாகக் கருதப்படும் கைலாய மலையையும் அதைச்சார்ந்துள்ள மான்சரோவர் ஏரியையும் திபெத்தில் (சீனா) அமைந்துள்ளது. ஸ்கந்த புராணத்தின்படி, சிவபெருமான் கயிலாய மலையின் உச்சியில் அமர்ந்து தியானிக்கிறார். இந்து புராணங்களின்படி, மான்சரோவர் ஏரி முதன்முதலில் பிரம்மா தனது மனதில் படைத்து, பிறகு அதை பூமியில் உருவாக்கியதாகும். இந்த ஏரி 51 சக்திபீடங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

புராணங்களின், கயிலாய மலை உலகின் மையமாகவும் மற்றும் உலகின் தூண் என்றும் அதன் நான்கு முகங்களும் படிகம், வைரம், மாணிக்கம் மற்றும் தங்கத்தால் ஆனவை என்று குறிப்பிட்டுள் ளது. கயிலாயத்தில் இருந்து சட்லெஜ், பிரம்மபுத்ரா, கரனாலி மற்றும் சிந்து ஆகிய நான்கு முக்கியமான நதிகள் உருவாகின்றன. இந்து புராண தொடர் புடைய பிரமாண்டமான கயிலாயத்தை தரிசித்து மான்சரோவர் ஏரியில் புனித நீராடி தான் அறிந்தோ அல்லது அறியாமலோ செய்த பாவங்கள் தீர்த்து எல்லாம் வல்ல ஈசனின் அருளைப் பெறுவதற்கு ஒவ்வொரு இந்துக்களும் ஆசைப்படுவது இயல்பு.

இந்தியாவில் இருந்து கயிலாய பயணம் நான்கு வழியாகச் செய்யப்படுகின்றது. அவை (1) டெல்லி-காத்மண்டு (2) டெல்லி -லக்னோ-நேபால்கஞ். மேலும் இந்திய அரசாங்கம் இந்த யாத்திரையை இரண்டு வழிகளில் நடத்துகின்றது. அவை 80 கிமீ மலையேற்றங்களைக் கொண்ட (கால் நடைபயணம்) (3) டெல்லி-லிபுலேக்பாஸ் (4) டெல்லி-சிக்கிம்-நாதுலாபாஸ். இந்த யாத்திரைகள் அனைத்தும் மிகவும் கடினமானவை மற்றும் செலவும் மிகவும் அதிகம். இந்திய அரசாங்கத்தினால் செய்யப்படும் பயணத்தை செய்து முடிப்பதற்கு குறைந்தபட்சம் 25 நாட்கள் தேவைப்படும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கனவுத் திட்டங்களில் ஒன்றான கயிலாய சாலைவழிப் பயணம் 439 கோடி செலவில் நிறைவுச் செய்யப்பட்டு 08 மே 2020இல் திறக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய பாதை யில் நாம் டெல்லியில் இருந்து புறப்பட்டு உத்தராகண்ட் மாநிலத்தின் பித்தௌரகட் மாவட்டம் வழியாக சொகுசு வாகனம் மூலமாக 710 கிமீ பயணித்து இந்தியா-நேபால்-சீனாவின் சர்வதேச எல்லையில் உள்ள லிபுலேக்பாஸ் சென்று அடைய லாம். எல்லையை தாண்டியபின்பு கயிலாயத்தை சென்றடைவதற்கு சிறப்பு வாகனம் மூலம் 97 கிமீ மட்டும் பயணித்தால் போதும். இந்தியாவில் டெல்லியில் இருந்து முழுப் பயணத்தை நாம் 12 நாட்களில் செய்து முடிக்கலாம்.



இந்த ஆன்மீக பயணத்தில் 8 நாட்கள் நாம் இந்திய மண்ணில் பயணம் மேற் கொள்வதால் நமது தென்-இந்திய பாரம்பரிய உணவுக்குப் பஞ்சம் இருக்க வாய்ப்புகள் மிகவும் குறைவு. நாம் நான்கு நாட்கள் மட்டுமே திபெத்தில் பயணிக்க வேண்டும். அதில் ஒருநாள் மான்சரோவர் நதியை சிறப்பு வாகனம் மூலம் 100 கிமீ 5 மணி நேரத்தில் சுற்றிவந்து பூஜைகள் செய்வோம். மீதமுள்ள மூன்று நாட்களில் கயிலாய மலையை நடந்து அல்லது குதிரைமூலம் 49 கிமீ சுற்றி வரவேண்டும்.

மேலும் இந்தியாவில் இருந்து புதிய பாதையில் பயணம் செய்வது மிகவும் எளிமையாவதுடன் பயணச் செலவு மிகவும் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே இனிவரும் நாட்களில் நேபாளம் வழியாகக் கயிலாய யாத்திரை தேவையிராது.

இருப்பினும் இந்தப் புதிய பாதையில் பயண சம்பந்தபட்ட விரிவான வழி காட்டுதல்கள் மற்றும் சிறப்பு ஆலோசனை கள் இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் இதுவரை வெளியிடப்படவில்லை. இதைப் பற்றிய விவரங்களை பின்வரும் கட்டுரை களில் காணலாம்.



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715



சந்திரமௌளீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




# கனடாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒன்ராரியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்று நோய்ப் பரம்பல் குறைவடைந்து வருவதால் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பத்துப் பேர் சேர்ந்து பழக ஒன்ராரியோ மாகாண அரசு 2020 ஜூன் 12இல் இருந்து அனுமதி அளித்துள்ளது.

இவ்வாறு சேர்ந்து சமூகமாகப் பழகும் 10 பேரையும் சேர்த்து சமூக வட்டம் (Social circle ) என மாகாண அரசு வரையறை செய்கிறது. அதாவது இந்தச் சமூக வட்டத்தில் இருக்கும் ஒருவர் இன்னொரு சமூக வட்டத்தினுள் சேரக்கூடாது. அத்துடன் ஒரு சமூக வட்டத்தினுள் இருப்போர் அந்தச் சமூக வட்டத்தினுள் இருப்போருடன் தொட்டுப் பழகலாம், கட்டி அணைக்கலாம், ஆனால் அந்த வட்டத்திற்கு வெளியில் இருக்கும் ஒருவருடன் கட்டாயம் இரண்டு மீற்றர் இடைவெளியைப் பேணவேண்டும்.

ஒரு சமூக வட்டத்தினுள் இருக்கும் 10 பேரும் பல வீடுகளில் வாழ்வோராக இருக்கலாம். இந்த நடைமுறையை மாகாண அரசு அமலுக்குக் கொண்டு வந்ததன் முக்கிய காரணம், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள், பெற்றோர், பேரன், பேத்திமார் எனப் பல வீடுகளில் இருப்போர் ஒன்றாகச் சேர்த்து பழக அனுமதிப்பதற்கேயாகும்.

உங்களுடைய சமூக வட்டத்தினுள் பேரன், பேத்தி என 70 வயதுக்கு மேற்பட்டோரைச் சேர்க்க விரும்பினால் உங்கள் குடும்பத்துடன் ஆரம்பித்து அவர்கள் இணைந்தபின் படிப்படியாக உங்கள் சமூக வட்டத்தினுள் உறுப்பினர் களை அதிகரித்துப் பத்துப் பேராக உயர்த்துங்கள். இவ்வாறு படிப்படியாக சமூக வட்டத்தினுள் இருப்போரின் எண்ணிக்கையை அதிகரிப்பது சமூக வட்டத்தினுள் இருக்கும் வயது முதிந்தோருக்கும் அல்லது நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோருக்கும் பாதுகாப்பான தாகும். இவ்வாறு ஒரு சமூக வட்டத்தினுள் இருக்கும் ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரை கோவிட்-19 தொற்று நோய் பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் ஏனைய ஒன்பது பேரும் சமூகத் தனிமைப் படுத்தலைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இப்புதிய சமூக வட்ட முறைபற்றி ஊடக வியலாளர்களுக்கு விவரித்த ஒன்ராரியோ மாகாண சுகாதார அமைச்சர் Christine Elliot “உங்களுடைய சமூக வட்டத்தினுள் இருப்போரை நீங்கள் தொட்டுப் பழகக் கூடிய, கட்டி அரவணைக்கக் கூடியவர்கள் என நினையுங்கள். கோவிட்-19 தொற்று நோய்ப் பரம்பல் முற்றாக ஒழிக்கப்பட முன்னர் நாங்கள் இவ்வாறு தொட்டுப் பழக அனுமதிக்கிறோம் என்பதை நினைவு கூருங்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட சமூக வட்டத்தினுள் அங்கம் வகிக்கக் கூடாது” என்றார்.

ஒன்ராரியோ மாகாண முதல்வர் Doug Ford ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக் கையில் “உங்களுக்கு நேர்மையானவராக நீங்கள் இருங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட சமூக வட்டத்தினுள் அங்கம் வகிக்க வேண்டாம். நாங்கள் நகர் காவலர்களைக் கொண்டோ அல்லது பரிசோதகர்களைக் கொண்டோ இதைக் கண்காணிக்கப் போவது இல்லை. உங்கள் சமூக வட்டத்தினுள் அங்கம் வகிக்காதோரிடம் நீங்கள் இரண்டு மீற்றர் இடைவெளியைப் பேணுவதன் மூலம் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலைத் தடுக்க உதவுகிறீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்” என்றார்.

ஒன்ராரியோ மாகாண அரசு முன்னர் அறிவித்ததுபோல் பொதுமக்கள் 10 பேர் வரையில் தொடர்ந்தும் பொது நிகழ்வு களில் பங்குபற்றலாம். ஆனால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இடையே 2 மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவேண்டும்.




ஒன்ராரியோ மாகாண அரசு சமூக வட்டத்தை 10 பேராக அனுமதித்தற்குரிய ஏனைய காரணங்கள்: குழந்தை பராமரிப்பு அல்லது மூத்தோர் பராமரிப்புத்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)



பொது இடங்களில்
முகக் கவசம் அணிதல்
கோவிட்-19 தொற்றுள்ள அனைவருக்கும் அறிகுறிகள் இருப்பதில்லை. சிலர் தங்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதை கூட உணராமல் உள்ளனர். முகக் கவசம் அணிவதன் மூலம் தொற்றுள்ள நபர் தன்னை அறியாமல் கோவிட்-19 -ஐ மற்றவர்களுக்குக் கடத்தும் அபாயத்தைக் குறைக்கலாம்.
பொது இடங்களில் முகக் கவசம் அணிதல்
Québec.ca/masque
1 877 644-4545
Votre gouvernement
Québec

# நாமும் நமது இல்லமும் 560

## ஆதனத்தில் கோவிட்-19 ஏற்படுத்திய மாற்றம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஆண்டு 2019 மே மாதத்திற்கும் 2020 ஆண்டு மே மாதத்திற்கும் இடையில் ஆதன வியாபாரத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராதது நடப்பதே வாழ்வில் மிகப்பெரிய மாற்றம். கடந்த வருடம் (2019) யாரும் எதிர்பாராதது 2020இல் நடந்துள்ளது. கொரோனா போன்ற வைரசின் இவ்வாறான பெரிய பாதிப்பை முன்னைய வைரசுகள் ஏற்படுத்தவில்லை. 1919/1920இல் ஏற்பட்ட Spanish flu போன்றதொரு பெரிய வைரசாகக் கோவிட்-19 என்ற வைரசும் புதிய சரித்திரத்தில் குறிக்கப்படும்.

ரொறொன்ரோ பிரதேச ஆதன சபையின் (Toronto Regional Real Estate Board) மாதாந்த அறிக்கையில் மே மாதத்தில் ஆதன வியாபாரம் பற்றிய அறிக்கை வெளிவந்துள்ளது. பொதுவாக இந்தச் சபையினால் வெளியிடப்படும் அறிக்கை யிலேயே ஆதன வியாபாரம் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்கும். இந்த சபையே ரொறொன்ரோ பிரதேசத்திலுள்ள ஆதனங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக 100 வருடங்களுக்கு முன்பாக உருவாக்கப் பட்டது. இன்று இந்த சபையில் 57,000 அங்கத்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

| மாதம் | விற்கப்பட்ட ஆதனங்களை | சராசரி விலை |
|---|---|---|
| ஜனவரி 2020 | 7,763 | $875,767 |
| பெப்ரவரி 2020 | 8,902 | $904,450 |
| மார்ச் 2020 | 6,936 | $894,745 |
| ஏப்ரல் 2020 | 2,317 | $789,054 |
| மே 2020 | 3,549 | $825,674 |

2019 மே மாதத்தில் கைமாறிய ஆதனங்களின் எண்ணிக்கை 7,356. இந்த எண்ணிக்கை 2020 மே மாதத்தில் 3,549 ஆகக் குறைந்தது. ஆனால் விலையில் 4.6% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கொரோனாவின் பாதிப்பு காரணமாக மார்ச் 18, 2020இல் மக்கள் வீடுகளில் முடங்கியிருக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் ஏப்ரல் 2020 முழு மாதமும் மக்கள் வீட்டில் முடங்கி இருந்தனர். இதனால் பொருளாதாரத்தில் முழுமை யான பாதிப்பான மாதமாக ஏப்ரல் 2020 இனைக் கொள்ளலாம். இதுவரை 2020 மே மாதமும் ஆதன வியாபாரத்தில் முழு பாதிப்படைந்த மாதமாக கொள்ளலாம்.

இங்குள்ள பட்டியலைக் கவனிக்கும் போது, இந்த ஆண்டின் (2020) ஏப்ரல்

| | வாடகை 2019 | வாடகை 2020 |
|---|---|---|
| ஓர் அறை | $2197 | $2086 |
| இரண்டு அறை | $2904 | $2740 |

மாதத்தின் விலையிலும் விற்கப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கையிலும் பெரிய பாதிப்பை காணலாம். ஆனால் இதுவரை மே மாதத்தை முந்திய மாதத்துடன் ஒப்பிடும்போது சிறிய மேல்நோக்கிய மாற்றத்தைக் காணலாம். ஒன்ராரியோ அரசு பகுதி பகுதியாக வியாபாரங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கி வருவதாலும், காலநிலை சாதகமாக மாறி வருவதாலும் எதிர்வரும் மாதங்கள் வியாபாரத்தில் சிறப்பானதாக எதிர்பார்க்க லாம். எனினும் ஜூன் 2020 ஆரம்பத்தில் ஒன்ராரியோ அரசு ஜூன் 2020, மாத இறுதிவரை இறுக்க நிலையைக் (Lock down) கடைபிடிக்க இருப்பதாகத் தெரிவித் திருப்பதால், பெரிய மாற்றங்களை உடனடியாக எதிர்பார்க்க முடியாது. அத்துடன் அமெரிக்காவில் George Foyd இன் மீதான தாக்குதலால் ஏற்பட்ட உயிரிழப்பு, அமெரிக்காவில் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை அமெரிக்கப் பொருளாதாரத்தை மே மாதத்திலும் தாக்க மடையச் செய்துள்ளது.

அமெரிக்கா கனடாவுக்கு இடையிலான ஏற்றுமதி இறக்குமதி 70%. ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையேயான எல்லை மூடப்பட்டுள்ளது. இவ்வாறான மாற்றங்கள் பொருளாதரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது. ஏற்கனவே பாதிப்பு நிலையிலுள்ள கனடியப் பொருளாதாரச் சிக்கலை மேலும் இறுக்கமாக்கும் என்பதும் உண்மை.

குறிப்பாக ரொறொன்ரோ மத்திய பகுதியில் வியாபார நிலையங்கள், அலுவலகங்களின் கதவடைப்பினால், அங்கு தொழில்புரிவோர் இருக்கும் இடத்தை விட்டு வெளியேறுவ தால் அடுக்கு மனைகள் வெற்றிடமாகிக் கொண்டு வருகிறது. இதனால் வாடகை யில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மே 2019 உடன் ஒப்பிடும்போது மே 2020இல் ஓர் அறை, இரு அறை கொண்ட மனைகளின் வாடகையிலும் இறக்கம் ஏற்பட்டுள்ளது. மிகப்பெரிய எண்ணிக்கை யான மனைகள் வாடகைக்கு காத்திருக் கின்றன. இந்த நிலைமைகள் எவ்வளவு காலம் தொடரும்?
புரிந்த கேள்வி தெரியாத பதில். எனினும் ஆதன முதலீடு நீண்ட காலத்துக்கு உரியது. இதுவே உண்மை.




### நஞ்சு என்று நீ நினைத்து நாடா மதுவை இருந்திடுவாய்!

மதுவை நாடிப் போகாதே
மரணம் உன்னை காத்திருக்கு
அதுவே உந்தன் வாழ்வினிலே
ஆனந்தம் இல்லா அழித்துவிடும்
கதவை தட்டும் கொரனோவோ
காலம் கடந்தால் ஓடிவிடும்
மதுவோ உன்னைக் காலனிடம்
விரைவாய் கூட்டிச் சென்றிடுமே !

குடித்துத் தெரிவில் நீ கிடந்தால்
ஓடித் திரியும் தெருநாய்கள்
பிணமாய் உன்னை நினைத்தபடி
பிய்த்து உதற கூடிவரும்
தெரிவில் போகும் சனமெல்லாம்
திட்டித் தீர்த்தே சென்றிடுவார்
எதற்கும் உதவா நிலையினிலே
இருப்பாய் என்பதை எண்ணிவிடு!

கோடி இருப்பார் குடித்தழிப்பார்
குடிசை இருப்பார் குடியழிப்பார்
மாடி மனைகளில் இருப்பார்க்கு
வசதி வாய்ப்பு நிறைந்திருக்கும்
குடிசை ஒன்றே கதியாக
வாழும் உனக்கு எதுவிருக்கு
உயிர்தான் உனக்கு உறுதுணையே
அதையும் குடியால் அழித்திடாதே!

நஞ்சு என்று நீ நினைத்து
நாடா மதுவை இருந்திடுவாய்

அஞ்சியஞ்சி உன் குடும்பம்
அழுதே வாழ்க்கையைப் பார்க்கின்றார்



பிஞ்சுக் குழந்தை முகம்பாரு
பெற்றதாயின் பேச்சைக் கேள்
கையைப் பிடித்த மனையாளும்
கதறிநிற்கும் குடியை விடு!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

*கடந்த கால நிகழ்வுகளில் மனதை திளைக்க விடாதே...*
*எதிர்காலத்தை குறித்த கவலைகளில் மூழ்காதே...*
*இன்று நீ கையில் வைத்திருக்கும் இந்த நொடியில்*
*மனதை செலுத்தி ஆனந்தமாய் இரு* - புத்தன்



# தேர்தலும், பொதுமக்களும்!




இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ற் மாதம் 05ஆம் திகதி நடைபெறும் என உத்தியோகபூர்மாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளும் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன. தற்போதுள்ள கொரோனா சூழலில் முன்னரைப் போலப் பாரிய கூட்டங்களை நடத்த முடியாவிட்டாலும் வேறு வழிமுறைகளில் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களில் களமிறங்கியுள்ளன.

நடைபெறவுள்ள தேர்தலில் அதிகளவான ஆசனங்களை பொதுஜன பெரமுன கட்சியே பெறும் என்கின்ற நம்பிக்கை ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு உள்ளது. ஆனால், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்பதே ராஜபக்ஸ அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த எதிர்பார்ப்பும் சில சமயங்களில் சாத்தியமாகலாம். நிலைமை அவ்வாறுதான் உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவடைந்து, ரணில் அணியினர் யானைச் சின்னத்திலும், சஜித் அணியினர் தொலைபேசி சின்னத்திலும் போட்டியிடுகின்றனர். மலையகத் தமிழ் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் சஜித் அணியோடு உள்ளனர். எனினும், சஜித் அணியில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட மங்கள சமரவீர உள்ளிட்ட சிலர் அண்மையில் வெளியேறியுள்ளனர். இதனால் சஜித் அணிக்குள் பலவீனமான நிலையே ஏற்பட்டுள்ளது.

தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்கின்ற அரசாங்கத்தின் நோக்கத்திற்குத் தடையாக இருந்த நிலைமைகள் யாவும் நீங்கிவிட்டன. தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம், சுகாதார நடைமுறைகள் என்பனவற்றிற்கும் அப்பால், தேர்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் மீதான தீர்ப்பினையே அரசாங்கம் பதற்றத்துடன் எதிர்பார்த்திருந்தது. பத்து நாட்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளுக்குப் பிறகு அந்த மனுக்களை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனையடுத்து தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

அடுத்ததாக சுகாதார நடைமுறைகளைப் பேணி, மக்கள் வாக்களிப்பது எப்படி என்பது குறித்து வாக்களிப்பு ஒத்திகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மாவட்டங்கள் தோறும் கட்டம் கட்டமாக இந்த ஒத்திகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர்தல் வாக்களிப்பின்போது சமூக இடைவெளியை பேணுதல் என்பது இதில் முக்கியமான நடைமுறை. இவ்வாறிருக்கும் போது, தேர்தலுக்காகப் பிரசாரக் கூட்டங்களை நடத்த முடியாது என்பது வெளிப்படையாகத் தெரியவருகின்றது. அதற்காக வேறு விதமான நடைமுறைகளையே கையாள வேண்டும்.

தற்போது முதற் கட்டமாக சமூக வலைத்தளங்களில் கட்சிகள் தங்கள் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளன. குறிப்பாக முகநூல் இதற்குப் பிரதான களமாகப் பயன்படுத்தப்படுகின்றது. வீடுவீடாகச் சென்று மக்களை சந்திப்பது. பிரசுரங்களை விநியோகிப்பது. சிறிய மக்கள் (Pocket meetings) சந்திப்புகளை நடத்துவது போன்றவையும் நடைபெற்று வருகின்றது.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் (வடக்கு, கிழக்கில்) தமிழ் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளும் இவ்விதமான முறையில் தங்கள் பிரசாரத்தை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே இவ்விதமான நடவடிக்கைகள் தமிழ் பிரதேசங்களில் ஆரம்பமாகி விட்டன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரசார விளம்பரங்கள் அதிகளவில் முகநூல்களில் வெளிவந்து கொண்டிருப்பதைக் தற்போது காண முடிகின்றது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 11ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து கருத்துக்களை தெரிவித்தார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பிரசாரத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்திருப்பதாக அவர் தெரிவித்தார். குறித்த ஊடக சந்திப்பில் அவர் பல விடயங்களைக் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கியுள்ளதாகவும், இந்தத் தேர்தலிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்ற போது, எவ்வாறான பின்னணியில் இந்தத் தேர்தலை சந்திக்கின்றோம் என்பதனை மக்களுக்கு விளக்கும் வகையில் கருத்துக்களை தான் முன்வைப்பதாகத் தெரிவித்தார்.



அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதே வேளையில் தமிழ் மக்களின் வாழ்வதாரம், தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது அவசியம் என்றும், இதற்கான செயல் திட்ட வரைவு ஒன்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு இம்முறை கொண்டிருப்பதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வுக்கான முயற்சி என்பது நீண்டதொரு பயணம். போரிற்குப் பின்னான கால கட்டத்தில் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் போன்ற விடயங்களில் தமிழ் மக்களின் வாக்குகளால் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பினர் என்ன செய்தனர் என்பதுதான் கேள்வி.

போர் முடிவுற்றதன் பின்னர் 2010ஆம் ஆண்டிலிருந்து முதல் ஐந்து ஆண்டுகள் மஹிந்த அரசாங்கத்தின் போதும், பின்னர் 2015ஆம் ஆண்டு வந்த ரணில் -மைத்திரி அரசாங்கத்தின் போதும் தொடர்ச்சியான 10 வருடங்களில் அரசியல் தீர்வு குறித்த நகர்வுகளை தவிர்த்து பார்த்தாலும், அபிவிருத்தி, வாழ்வாதாரம் இரண்டு விடயங்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சாதித்தது என்ன?

2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்திற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்கு பிரதானமானதாக இருந்தது. தொடர்ந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு இடர்களின் போதும் அப்போதைய அரசாங்கத்தை காப்பற்றியதை மட்டுமே கூட்டமைப்பின் சாதனையாகக் குறிப்பிடலாம். தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பேரம் பேசுகின்ற வாய்ப்புகளை கூட்டமைப்பு பயன்படுத்திக்கொள்ளவில்லை. தனிப்பட்ட நலன்களை அவர்கள் பெற்றுக் கொண்டனரா என்கின்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

தற்போது தீர்வு குறித்த வாக்குறுதிகளை வழங்க முடியாத நிலையில், அபிவிருத்தி-வாழ்வாதாரம் குறித்த விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாற்று அணியாகத் தங்களைப் பிரகடனம் செய்து கொண்டுள்ள முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கடந்த 12ஆம் திகதி நாட்டின் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவே அக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா மற்றும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகச் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் அனுப்பப்பட்டுள்ள இக்கடிதம் ஒரு வகையில் தமிழ் மக்களை ஈர்ப்பதற்கான பிரசார நடவடிக்கை போன்றே தோன்றுகின்றது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேரடியாக மக்களை சந்தித்து வருகின்றது. மக்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் போது நேரடியாக அந்த இடத்திற்கே சென்று அவதானிப்போராக அக்கட்சி உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு சட்ட ரீதியாக வாதாடும் முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் அரசாங்கத்துடன் பேச்சுவார்தைகளில் ஈடுபடக்கூடிய இராஜதந்திரம் எதுவும் அவர்களிடம் இல்லை.

தேர்தல் நாள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் எதிர்வரும்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
HousePrice.ca
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# தாயகத்தில் மக்கள் நலம் புரியும் சமய அறக்கட்டளை

"மற்றவரின் நலத்தை நீ கவனித்தால் உன் குடும்பத்தை இறைவன் காப்பான்"

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என ஏட்டில் படித்ததை உண்மையாக்குகின்ற வகையில் "வழக்கம்பரை அம்மன் அறக்கட்டளை" புலம்பெயர்ந்த உறவுகளின் நன்கொடையுடன் உள்ளூர் மக்களுக்குப் பல சேவைகள் புரிந்து வருகிறது. ஆலயங்கள் அமைந்திருக்கும் இடங்களில் குடியிருக்க வேண்டும் என்பது முதுமொழி. ஆனால் இன்றைய காலத்தில், இந்த முதுமொழி கூறிய கருத்து மற்றும் நோக்கங்கள் மாறிவிட்டன. இதனை மாற்றி ஆலயங்கள் உண்மையாக அமைக்கப்பட்ட தன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே இந்த அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது.



யாழ்ப்பாணம், நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு முன்பாக இருந்து அடியார்களுக்கு அருளாசி வழங்கிய யோக சுவாமிகள் பற்றிப் பலருக்கு தெரிந்திருக்கும். சுவாமியின் அமெரிக்க சீடரான சுப்பிரமுனிய சுவாமி அவர்கள் அமெரிக்கா வின் ஹூவாய் மாகாணத்தில் ஒரு பிரமாண்டமான சிவன் கோவில் அமைத்தார். மேலும் குருவின் ஆணைப்படி உலகம் முழுக்க ஆலயங்கள் அமைத்து ஆயிரம் ஆயிரம் மக்களின் பசி தீர்க்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டார். சீடனும் புலம்பெயர் தமிழரும் ஒன்று கூடி எங்கள் சமயம், மொழி, கலாச்சாரம் மற்றும் பண்பாடு என்பவற்றை பாதுகாக்குமுகமாக ஆலயங்கள் உருவாக்க உதவினார். வோஷிங்டன் முருகன் கோவில் மற்றும் மொன்றியல் முருகன் கோவில் அமைக்கவும் காரணமாக இருந்தார்.

ஆனி 2018இல் தமது ஊரில் ஒரு சிறுமிக்கு ஏற்பட்ட துர்நிகழ்வால் அந்த ஊர் வாழ் பெரியோர்கள் ஒன்றிணைந்து வோஷிங்டன் முருகன் கோவில் அடியார்கள் உதவியுடனும் சிவயோக சுவாமியினதும் அவரது அமெரிக்க சீடன் சுப்பிரமுனிய சுவாமி அவர்களினது சீடன் போதிநாத வேலன் சுவாமி அவர்களின் ஆசீர்வாதத்துடனும் உருவாக்கியதே இந்த அறக்கட்டளை. கோவிட்-19 என்ற வைரஸ் உலகளாவிய மக்களைக் கடுமையாகத் தாக்கியபோது ஒரு குறிப்பிட்ட மக்களுக்காவது தம்மால் உதவ முடியும் என்ற நோக்கில் இந்த அறக்கட்டளை நெருக்கடியான ஊரடங்கு காலத்திலும் உதவி புரிந்தமை மிகப்பெரிய சிறப்பு. புலம்பெயர் மக்கள் தத்தமது கிராமங்களை மறக்கவில்லை என்பதற்கு பல உதாரணங்களை நினைவு கொள்ளலாம். இவர்களின் அனுசரணையுடனும் உதவியுடனும் வெவ்வேறு ஊர்களில் உள்ள மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது ஒரு போற்றக்கூடிய விடயம்.

இந்த அறக்கட்டளையின் இன்றைய முக்கிய நோக்கம் இதேபோன்ற பல அறக்கட்டளைகளை அந்தந்த ஊரில் இருக்கும் கோவில்கள் மற்றும் தேவாலயங்களின் பெயரில் ஆரம்பிப்பதே. "வழக்கம்பரை அம்மன் அறக்கட்டளை-



தொல்புரம்" ஆனது குறிப்பிட்ட ஊரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அன்பர்களாலும் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட பெரியவர்களாலும் செயல்படுத்தப்படுகின்றது.

இந்த அறக்கட்டளையின் சேவைகளில் சிலவற்றைப் பார்க்கலாம்: வயோதிபர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தல், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்குப் பசுமாடு வழங்குதல், கல்வி கற்க ஆர்வம் உள்ளவர்களுக்கு அவர்களின் தேவை கருதி அதற்கேற்ப உதவி செய்தல், பாடசாலைப் படிப்பை இடைநிறுத்தியவர்களுக்குக் கைப்பணித் தொழில் பயிற்சி வழங்குதல், பாடசாலை தூரம் கருதி, மாணவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முக்கியமாக தமது ஊரிலுள்ள ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களின் பெயரில் அறக்கட்டளை ஆரம்பிக்க இருப்பவர்களுக்கு தலா ரூபா 2 லட்சம் ஆரம்ப நன்கொடையாகக் கொடுத்தல். அத்துடன் தமது ஊரின் வளர்ச்சியிலும் சிறப்பிலும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், பேராசிரியர்கள் வங்கியாளர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மக்கள் சேவையில் ஆர்வம் உள்ளவர்கள் போன்றவர்களை இனங்கண்டு அவர்களை அங்கத்தர்களாகவும் காப்பாளர்களாகவும் கொண்டு அறக்கட்டளைக்குரிய யாப்பு ஒன்றை உருவாக்கி அதைத் திறம்பட நடைபெற உதவி செய்தல்.

இவர்களின் இன்றைய உடனடி நோக்கம் குறைந்தது பத்து அறக்கட்டளைகளை ஆரம்பித்தல். அண்மையில் ஏற்பட்ட கோவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த அறக்கட்டளையின் முயற்சியால் புலம் பெயர் உறவுகளின் உதவியுடன் காரைநகர், திருநெல்வேலி, சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய், சித்தங்கேணி, உடுவில், கொழும்புத்துறை, உரும்பிராய் மற்றும் கொக்குவில் போன்ற பகுதியில் இருக்கும் 585 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த சேவைகள் அந்தந்த ஊரில் இருக்கும் பொதுச் சேவை மனப்பான்மை கொண்ட பெரியவர்களாலேயே நடைமுறைப் படுத்தப்பட்டது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்வு.

இதன் தொடர்ச்சியாக அந்தந்த ஊரில் இருக்கும் ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களில் அறக்கட்டளைகள் அமைப்பதற்குரிய ஆரம்ப செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. சில பகுதிகளில் (வசாவிளான் மனம்பிராய் பிள்ளையார் கோவில்) அறக்கட்டளைகள் அமைப்பதற்குரிய ஆரம்ப வேலைகள் செய்து முடிக்கப்பட்டு செயல்பட ஆரம்பித்து விட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல ஊர்களிலும் இதுபோன்ற அறக்கட்டளைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதே இதன் அறங்காவலர்களின் பேரவா.

எமக்கிடையிலான மதம், சாதி, சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை ஓரம்கட்டி வைத்துவிட்டு, நாம் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்ற ஒரே நோக்கில் ஒன்றிணைந்து பல அறக்கட்டளைகளை உருவாக்குவோம். இவ்வாறான அறக்கட்டளைகளை உங்கள் ஊர்கள் மற்றும் கிராமங்களில் அமைக்க விரும்புவோர் கீழே உள்ள மின்னஞ்சல் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம். அவர்கள் என்றும் தமது சேவையை உங்களுக்குத் தர ஆவலாக உள்ளனர்.

**Email: chinniahg@hotmail.com**

## கனடாவில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவைகளை கொண்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கும் மேலும் தனிமையில் வாழவோரின் மனநல பாதிப்புகளைத்



தவிர்ப்பதற்கும் ஆகும்.

ஒன்ராரியோ மாகரண அரசு திருமணம் மற்றும் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை 2020 ஜுன் 13இலிருந்து அதிகரித்துள்ளது. உள்ளரங்கு நிகழ்வுகளில் அவ்வரங்கில் அனுமதிக்கப்படக்கூடியோரின் எண்ணிக்கையில் 30%ஆனோர் மட்டுமே பங்குபற்றலாம். வெளியரங்க நிகழ்வுகளில் 50பேர் வரையில் பங்குபற்றிலாம். ஆனால் இந்நிகழ்வுகளில் பங்குபற்றுவோரில் ஒரே சமூகவட்டத்தைச் சேராதோர் ஏனையோரிடமிருந்து 2 மீற்றர் இடைவெளியைப் பேணவேண்டும்.

அத்துடன் இப்பங்குபற்றுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு திருமணம் மற்றும் இறுதிச்சடங்கு நிகழ்வுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. வரவேற்பு உபசாரம் (Receptions) உட்பட ஏனைய நிகழ்வுகளுக்குத் தொடர்ந்தும் பத்துப்பேரே அனுமதிக்கப்படுவர். அவர்கள் ஒரே சமூகவட்டத்தைச் சேராதோருடன் 2 மீற்றர் இடைவெளியைப் பேணவேண்டும்.

## தேர்தலும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் ஆர்வம் எவ்வாறுள்ளது என்று என்னிடம் கேட்டார். தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் ஆர்வமின்றியே காணப்படுகின்றனர் என்று கூறினேன். தெற்கிலும் அப்படித்தான் என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தெற்கை விடவும், வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக இருக்கும் என்பதே கணிப்பாகவுள்ளது.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7



OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm

# வடமாகாணக் கல்வி நிலை—சில பின்னணிகளும், ஆலோசனைகளும்

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

## பகுதி-2

“மனிதன் தன் இதயத்தின் ஆழத்தில் எந்த எண்ணத்தைக் கொண்டிருக்கிறானோ அதேபோல் ஆவான்” என்ற ஜேம்ஸ் அலனின், இந்தக் கருத்தே, பகவத்கீதையிலும், கிருஸ்ணர் அருச்சுணனிடம் கூறும் பொழுது, “நீ எதுவாக வரவேண்டுமென்று நினைக்கின்றாயோ அதுவாகவே வருவாய்” என்ற கீதோபதேசம் எமது மாணவர்களுக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற ஒன்றாகும்.

மாணவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் பொழுதே பிற்காலத்தில் எப்படியான ஒரு நிலைக்கு உயரவேண்டுமென்று விரும்பிக் கற்கின்றனர்ரோ அதையே மீண்டும் மீண்டும் நினைத்து மனதுக்குள் உருப்போட்டு அவர்களது கல்வியைத் தொடர்ந்தால் நிச்சயமாக ஒவ்வொரு மாணவனும் தான் நினைப்பது போலவே எதிர்காலத்தில் ஒரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ, ஒரு சட்டத்தரணியாகவோ, ஒரு விஞ்ஞானியாகவோ, தகைமை பெற்ற ஊடகவியலாளராகவோ அல்லது ஒரு தொழில் முயற்சியாளனாகவோ நிச்சயமாக வருவர். ஒவ்வொருவருடைய எண்ணங்களின் மொத்த வடிவமே வாழ்க்கை என்பதை மனதில் நினைத்துக் கொண்டு மனிதர் தங்கள் வாழ்க்கையின் பயணத்தைத் தொடர வேண்டும்.

மாணவர்களின் கல்வி நிலையை மேலும் மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் முன்வைக்கப்படுகின்ற இந்தக் கருத்துக்களுடன் மாணவர்களின் எண்ணங்களே அவர்களது வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. “என்னால் முடியாது, எனக்கு நினைவாற்றல் குறைவாக இருக்கின்றது, என்னால் நீண்ட நேரம் இருந்து படிக்க முடியவில்லை என்பதெல்லாம் அவர்களது எண்ணங்களின் பலவீனமே என்பதை உணர்ந்து தூய பலமான எண்ணங்களை வளர்ப்பதன் மூலம் ஒவ்வொருவரும் தமது எதிர் காலத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

வெளியில் இருந்து விமர்சனங்களை மேற்கொள்வோர் குறிப்பிடுவது போன்று வடமாகாணம் கல்வியில் பின்தங்கியிருக்கவில்லை. கடந்த பத்து வருடங்களாகத் தொடர்ச்சியான அதிகரிப்பு இடம்பெற்றதைப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. ஆனால் ஏனைய மாகாணங்களின் வளர்ச்சி வீதம் அதிகமாகவும் வட மாகாணத்தின் வளர்ச்சி வீதம் படிப்படியாகவும் அதிகரித்துச் செல்வதால், வெளிப் பார்வைக்கு பின்னடைவைக் கொண்டுள்ளது போல் தோற்றமளிக்கின்றது. ஆயினும் வட மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் துரித மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகக் கடந்த பத்து வருட பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அதனைச் சீர்தூக்கிப் பார்த்தால், அவை எங்கள் ஒவ்வொருவரின் எண்ணங்களின் மீதும் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தும்.

| அட்டவணை: 01 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | மாவட்டம் | Type - 1AB | Type - 1C | Type - 2 | Type - 3 | மொத்தம் |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 55 | 48 | 150 | 203 | 456 |
| | கிளிநொச்சி | 12 | 15 | 37 | 40 | 104 |
| | மன்னார் | 16 | 24 | 36 | 59 | 135 |
| | வவுனியா | 14 | 23 | 47 | 98 | 182 |
| | முல்லைத்தீவு | 14 | 16 | 37 | 60 | 127 |
| | **மொத்தம்** | **111** | **126** | **307** | **460** | **1004** |
| கிழக்கு | திருக்கோணமலை | 26 | 62 | 95 | 130 | 313 |
| | மட்டக்களப்பு | 35 | 53 | 103 | 167 | 358 |
| | அம்பாறை | 37 | 67 | 148 | 186 | 438 |
| | **மொத்தம்** | **98** | **182** | **346** | **483** | **1109** |
| தெற்கு | காலி | 66 | 73 | 100 | 191 | 430 |
| | மாத்தறை | 45 | 73 | 113 | 130 | 361 |
| | அம்பாந்தோட்டை | 38 | 70 | 120 | 93 | 321 |
| | **மொத்தம்** | **149** | **216** | **333** | **414** | **1112** |

இலங்கையில் 2019ஆம் ஆண்டின்படி, இயங்கும் 10,144 அரச பாடசாலைகளில், 370 தேசிய பாடசாலைகளாக உள்ளன. இப்பாடசாலைகளில், 4.2 மில்லியன் மாணவர்களும், 235,924 ஆசிரியர்களும் சேவையில் உள்ளனர். இவற்றில் வடக்கில், 22 தேசிய பாடசாலைகளும், 976 மாகாணப் பாடசாலைகளும், 6 தனியார் பாடசாலைகளுமாக இயங்கும் நிலையில் 1,004 பாடசாலைகள் உள்ளன. வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகப் பின்வரும் நான்கு நிலைமைகளை வைத்து மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஏனைய சில மாகாணங்களுடனான பெறுபேற்று வீதங்கள் ஒப்பிடப்பட்டுள்ளன. அதற்காக வடமாகாணத்தின் கல்விச் செயற்பாடுகள் பின்தங்கியுள்ளன என்று எவரும் அர்த்தம் கொள்ளவேண்டாம்.

-கடந்த பத்து ஆண்டுகால கல்விப் பெறுபேறுகளின் வளர்ச்சிப் போக்குகள்

-வடமாகாணப் பாடசாலைகளின் பெறுபேறுகளின் மந்தமான உயர்ச்சிக்கான காரணங்கள்

-இனங்காணப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அவற்றிற்கான பரிகாரங்களைத் திட்டமிடுதல்.

-திட்டமிட்ட பரிகாரகல்விச் செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தில் செயற்படுத்துதல்

இந்த இலக்குகளை அடைவதற்காகக் கல்விச்சமூகம் என்ற வகையில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து பயணிக்கும் பொழுது விரைவான மாற்றங்களைக் காணலாம்.

வடமாகாணத்தில் கிழக்கு மற்றும் தென் மாகாணங்களை விடக் குறைந்தளவு பாடசாலைகளும், மாணவர்களும் உள்ள போதும், மாணவர், ஆசிரியர் விகிதம் 13 : 1 என்ற விகிதத்திலும், கிழக்கு மாகாணத்திலும், தென் மாகாணத்திலும் 18:1 என்ற விகிதத்திலும், காணப்படுகின்றது. மேல்மாகாணத்தில் மாணவர், ஆசிரியர் விகிதமானது 21க்கு 1 ஆக இருக்க தேசியரீதியில் 18:1 ஆகக் காணப்படுகின்றது.

அந்தவகையில் வடமாகாணத்திலேயே ஏனைய மாகாணங்களை விட அதிகளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். குறிப்பாக இலங்கையின் 97 வலயங்களிலும் 97ஆவதாகத் தர வரிசைப்படுத்தப்பட்ட தீவக வலயத்தில் மாணவர்-ஆசிரியர் விகிதமானது 11:1 ஆக இருப்பது ஆசிரிய வளம் தொடர்பான பகுப்பாய்வுக்கு அப்பாற்பட்ட ஒரு சவாலாகக் காணப்படுகின்றது. ஆனால் இவை பாடசாலைகளின் தேவை அடிப்படையில் தகைமைகளை அறிந்து நியமிக்கப் படாததால், வட மாகாணத்தில் பல பாடசாலைகளில் சமநிலையற்ற ஆசிரியர் வளங்கள் காணப்படுகின்றன. இதுவே வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக உள்ளது என்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது.

வடமாகாணத்தில் இடம்பெற்ற ஆசிரியர் நியமனங்களில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்:

உலகில் எங்குமே இல்லாத ஓர் ஆசிரியர் வகுதியாக “தொண்டர் ஆசிரியர்கள்” நியமிக்கப்படுவது இங்குதான் காணப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோருக்குப் பாடசாலைகள் எங்கே இருக்கின்றன என்று தெரியாமலேயே அந்தப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராக சேவையாற்றியதாக ஆவணங்களைச் சமர்ப்பித்து நியமனங்களையும் பெற்றிருக்கின்றனர். இவர்களையே ஆரம்ப வகுப்புகளுக்குப் பொறுப்பாக அமர்த்துகின்றனர். இதனாலேயே வடமாகாணத்தின் ஆரம்பக் கல்வித் தரங்களில் தரமான கல்வியை அவர்களால் வழங்க முடியாது போய்விடுகின்றது. ஆரம்ப வகுப்புகளில், ஏற்படுத்தப்பட்ட வீழ்ச்சியே பின்னர் இடைநிலைக் கல்வியின் பெறுபேறுகளை மோசமாகப் பாதிக்கின்றது.

அதிபர்களும், வலயக்கல்விப் பணிப்பாளர்களும் ஆரம்பக்கல்வி அபிவிருத்தியில் குறைந்த கவனம் எடுப்பதும், பின்னர் சடுதியாகக் க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தர வகுப்புகளில் கூடிய கவனமும் எடுக்க முயற்சிப்பதாலுமே எமது பாடசாலைகளின் இடைநிலைக் கல்வித் தரத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்ட முடியவில்லை. எனவே, எதிர் காலத்தில் தொண்டர் ஆசிரியர்கள், கடமை நிறைவேறும் அதிபர்கள் என்ற வரம்புக்குட்படாத நியமனங்கள் செய்வதை விடுத்து வெற்றிடங்களுக்கு ஏற்ப காலத்திற்குக் காலம் தகைமை அடிப்படையில் பொருத்தமான ஆசிரியர்கள் மற்றும் தகைமை பெற்ற அதிபர்களின் நியமனங்களைக் கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில், பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழகங்கள் பட்டத்தை வழங்குகின்றன. இவர்கள் பட்டதாரிகளாக வெளியே வந்ததும், அவர்களது வேலை வாய்ப்புக்களுக்கான இலக்காகப் பாடசாலைகளே இருக்கின்றன. இதனால் தமக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்க வேண்டும் என்ற போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நிறுவனங்களாகப் பாடசாலைகளோ அல்லது கல்வி அமைச்சோ இருப்பதில்லை. இலங்கையில் பட்டதாரிகளை உள்வாங்குவதற்காக ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சாலைகள், சுயவேலைவாய்ப்பு முயற்சிகள் எனப் பல நூற்றுக்கணக்கான வாய்ப்புக்கள் நாட்டில் இருக்கும்பொழுது பாடசாலைகளை நோக்கிய போராட்டங்கள் தொடர்வதால், அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக அவர்களில் பலரை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படுகின்றது.

அதேவேளை ‘வேலையற்ற பட்டதாரிகள்’ என்ற வகுதியில் போராட்டத்தில் ஈடுபடுவோரில் பலர் கலைத் துறை, நுண்கலை மற்றும் வர்த்தக பட்டதாரிகளாகவே இருக்கின்றனர். இவர்களில் விஞ்ஞானப் பட்டதாரிகள் எவரும் வேலைக்காகப் போராடுவதில்லை. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வடமாகாணத்தில் 434 விஞ்ஞானம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட பொழுது 250க்கும் குறைவான பட்டதாரிகளே விண்ணப்பித்ததால், அவர்கள் அனைவரும் பரீட்சைகள் எதுவுமின்றியே விஞ்ஞான ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர். இதனால் வேலை கிடைக்காத பட்டதாரிகளின் தொடர்ச்சியான போராட்டங்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM™
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# வடமாகாண...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

கள் காரணமாக கலை, வர்த்தக, நுண்கலைப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் எழுந்தமானமாக வழங்கப் பட்டதால் பாடசாலைகளில் ஆசிரியர்களின் தேவைகள் தொடர்பாக சமநிலை பேணப்பட முடியாது போய்விடுகின்றது.




இதனால் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் தேவைகளுக்கு ஒரே பாடத்தில் மேலதிகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட தால், அவர்களுக்கும் பாடசாலைகளில் வேலை வழங்கமுடியாத நிலையில். ஏற்கனவே கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் இவர்களது நியமனங் கள் இடையூறாக அமைந்து விடுவதால், அவர்களும் வினைத்திறனுடனும், மன நிம்மதியுடனும் கற்பிப்பதில்லை.

பாடசாலைகளில் மேலதிகமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு அமைவாகவோ ஆசிரியர்கள் நியமிக்கப் படும் பொழுது அங்கே பல ஆசிரியர்கள் ஒரேநேரத்தில் ஓய்வில் இருக்கும் நிலை காணப்படுவதால் உட்பூசல்களும், முரண் பாடுகளும், அதிபர்களுக்கு எதிரான குழு உணர்வுகளும் உருவாகி, பாடசாலைகள் போராட்டக் களங்களாகவே மாறிவிடுகின் றன. பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் ஆளணிக்குக் குறைவாக ஓர் அதிபர் தனது ஆசிரியர் ஆளணியைப் பேணுவாராக இருந்தால் அங்கே உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் முழுமை யான பாட வேளைகளைக் கொடுக்கலாம். இதனால் ஆசிரியர்களில் பலர் ஒரே நேரத்தில், ஓய்வு அறையிலோ அல்லது மரங்களுக்குக் கீழோ கூடுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போய்விடுகின் றது. இது அதிபருக்கு வாய்ப்பான ஒரு கற்றல் சூழலை உருவாக்கும்.

இந்த வகுதிகளுக்கு மேலதிகமாகக் தேசிய கல்வியில் கல்லூரிகளும் வருடா வருடம் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர் களை உற்பத்தி செய்கின்றன. இவர்களும் ஒரே மாகாணத்தில் நியமிக்கப்படும் பொழுது மேலும் பல பிரச்சினைகள் உருவாகின்றன. மாகாண முறைமைகளின் கீழ் ஆசிரிய நியமனங்கள் மாகாணங் களின் கீழ் வந்தமையால், வடமாகாண ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்படுவதில்லை. ஆனால் தற் பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளோர் வன்னிக்குப் போவதற்கே தயக்கம் காட்டுவதுடன் யாரைப் பிடித்தாவது தமது வீட்டிற்கு அண்மையில் நியமனங்களைப் பெற்றுவிடுகின்றனர். இவ்வாறு எழுந்த மானமாக ஆளணிக் கோப்புக்கு ஏற்ற வகையில் அல்லாது வகை தொகையின்றி ஆசிரியர் நியமனங்கள் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கான கற்பித்தல் முறையியல், கல்வி உளவியல், கல்வி நிர்வாகம் போன்றவற்றில் எவ்வித பயிற்சி களும் பெற்றுக்கொள்ளாத நிலையிலேயே பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படுவோர் பயிற்சி அல்லது கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்களாகவே இருக்க வேண்டும். இலங்கையைத் தவிர்ந்த வேறு எந்த ஒரு நாட்டிலும் ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கொள்ளாத எவரும் வகுப்பறையினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். இங்குதான் எவரும் எந்த நேரத்திலும் வகுப்புகளுக்குள் நுழைந்து கற்பிக்கும் நிலை காணப்படுகின்றது. (தொடரும்...)











K2 New Condo Project
Kennedy & Hwy 401
• 5% Upon Signing
+ 2.5% Every six(6) Months
• Free Assignment
• Parking Included
• Possible Leasing During Occupancy
• Credit to Buyer
• Practical layout
• Capped Development Fee
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated

# கவலை ஏன்?

## எடுங்கள் அல்லது விடுங்கள்
## Don't get. Don't give

பிரச்சினை என்று ஒன்று வரும்போது அதைப்பற்றி சிந்தித்துக் கோபப்படுவதோ, ஏன் இப்படி நடக்கிறது என வருத்தப்படுவதோ பயனற்றது. தலையில் அடித்துக் கொண்டு கவலைப்படுவதும், இது காலம், என் கர்மா, கடவுள் இப்படி செய்துவிட்டார், அல்லது அவரால் இப்படி நடந்தது, இவரால் இப்படி நடந்தது என நொந்து கொள்வதும் எமக்குப் பழக்கமாகிவிட்டது. இப்படி மற்றவர்களை குறைசொல்லி திரியத் தேவையில்லை. எம் கழுத்தில், தோளில் இருக்கும் இந்த சுமையை இறக்கிவையுங்கள். இவற்றுக்கும் எமக்கும் தொடர்பில்லை. இந்தப் பிரச்சினைகளின் இயல்பு இதுதான். ஒருவருக்குத் தொல்லை கொடுக்கும் இப்பிரச்சினை, நாளடைவில் உங்களை வந்தடையும். பின்னர் இன்னொ ருவரை தொற்றிக்கொள்ளும். எனவே,இதை விடுத்து, வேறுவிடயம் பற்றிப் பேசுவோம்.

என்ன அந்த வேறுவிடயம்? அது அழியாப் பொருள் பற்றியது. அந்த அழியாப் பொருள், எங்கும் உள்ளது. உங்களுக்குள் ளும் உள்ளது. அது இல்லாத இடமே இல்லை. அந்த அழியாப் பொருளை நீங்கள் அளவிட முடியாது. வரைய முடியாது. புகைப்படம் எடுக்க முடியாது. அதைவிடவும், உங்கள் எண்ணக்கருத்துக் கள், கற்பனைகளால், எட்டவும் முடியாது. ஒருவர் அந்த அழியாப்பொருளை பற்றிக் கேட்டால், உங்களால் அதை விளக்க முடியாது. அது உங்கள் விளக்கங்களுக்கு அப்பாற்பட்டது. உதாரணமாக, ஒரு மாம் பழத்தின் சுவையை ஒருவருக்கு விளக்க வேண்டுமென்றால், அது எவ்வளவு கடினம்? ஏலக்காயின் நறுமணத்தைப் பற்றி உங்களுக்கு தெரியும். அந்த வாசனையை நீங்கள் எப்படி இன்னொருவருக்கு விளக்க லாம்? எல்லையற்ற பொருள் என்பது அது தான். அது இருந்தது, இருக்கிறது. இருக்கப் போகிறது. எல்லாமே அதில் இருந்துதான் உருவாகிறது. பின் அதற்குள் அடங்குகிறது.

**Prem Rawat**
**www.timelesstoday.com**

இதற்கு எதிர்மறையான இன்னொன்று, அழியக்கூடியது. முன்பு இல்லாதது. தற்பொழுது இருப்பது. பின் இல்லாமல் போய்விடுவது. இந்த அழியாப் பொருள், அழியும் பொருள் என்ற இரண்டு விடயங்களை பற்றியும் ஏன் பேசுகிறேன்? உங்களை கண்ணாடியில் நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களுக்குப் பெயர் இருக்கிறது. உங்களுக்கு ஒரு குடும்பம், ஒரு வேலை, உங்கள் பிரச்சினைகள் இப்படிப் பல விடயங்கள் இருக்கின்றன. இதைத்தான் உங்கள் வாழ்க்கை என்று நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் அழியாப் பொருளும், அழியும் பொருளும் இணைந்து உங்கள் வாழ்க்கை ஆகிறது. அளவிடமுடியாத, எல்லையற்ற அந்த அழியாப்பொருள், அழியக்கூடிய இந்த சிறு உடலுக்குள் இணைந்திருக்கிறது. எனக்குள்ளும், உங்களுக்குள்ளும் அடங்கி இருக்கிறது.

நீங்கள் வெளியில் பார்ப்பது அழியக் கூடியது. ஆனால், அந்த அழியக்கூடிய நமக்குள் அந்த அழிவற்ற பொருள் வீற்றிருக்கிறது. அது இருக்கும்வரை, நமக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. அது என்ன சந்தர்ப்பம்? இந்த அழிவற்ற

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# மகிழ்வோடு மனநிறைவாய் வாழ்ந்தாலென்ன?




போதை ஒழிப்பு தினம்
26 ஜூன் 2020

போதைக்கு நீங்கள் அடிமையாகலாமா?
பொறுப்போடு சிந்தியுங்கள் மானுடரே
வாதைதரும் போதையும்மை வாழவிடுமா?
வசந்தங்களிங்கே உம்மைத் தேடிவருமா?
காதைக் கொடுத்து கண்ணியத்தோடென்
கருத்தைக் கேளுங்கள் கட்டழகுக்
கோதைய ரெவருமும்மை விரும்புவாரா?
கோடிகிடைத்தாலும் வாழ்வுநிலை மாறிப்போமா?

மாறிப்போமா? மனநிலைதான் மானிடரே
மாற்றமது காணினன்றோ மகிழ்ச்சிவரும்
ஏறிப்போமா? வாழ்க்கையது உச்சம்தொட
ஏழ்மையிலா வாழ்வமைந்து அச்சம்விட
கூறிப்போமா? நல்வாழ்த்து தென்றலிங்கு
கூவாதோ குயில்களெல்லாம் மன்றம்வந்து
ஆறிப்போமோ? நெடுநாள்கொண்ட காயங்கள்
ஆனந்தமானதொரு வாழ்வுவந்தால்!

வாழ்வுவந்தால் வறுமைகூடத் தொலைந்துவிடும்
வள்ளலென்ற பெயரும்மைத் தேடிவரும்
தாழ்வுமனப் பான்மையெல்லாம் நீங்கிவிடும்
தகரமெனவுமை எண்ணியவர் தங்கமென்பார்
மூழ்கிவிடும் வாழ்வு போதைக்கடிமையானால்
மூச்சுமுட்டத் துன்பங்களே தொடர்ந்து வரும்
ஆழ்கடலில் தத்தளிக்கும் படகைப்போலும்
ஆகிவிடும் உம்நிலையும் அறிந்துகொள்ளும்!

அறிந்துகொள்ளும் போதைக்கு அடிமையானோர்
அறியமாட்டார் அரவணைக்கும் உறவுகளை
வறியநிலை தம்வாழ்வுநிலை உணரமாட்டார்
வயிற்றினை வஞ்சித்தேனும் போதைகொள்வார்
குறியாக இருப்பாரே போதைக்கடிமையாக
குந்தகம் செய்வோரை நிந்திப்பார்
வெறிகொண்டு உற்றோரைக் கொன்றுபெரும்
வேதனை தந்தோரும் மண்ணில் வாழக்கண்டோம்!

வாழக்கண்டோம் மனிதராய்வாழும் மிருகங்களை
வாழ்நாளை வீணாளாய் ஆக்கும் மூடர்களை
வேழம்போல் வாழுகின்ற நிலைவிடுத்து
வேண்டாத குப்பைபோல் வீழ்ந்துகிடப்பார்
தாழம்பூ பயன்படுமா இறைபூசைக்கு?
தங்கம்போல் மின்னிடுமா தகரம்?
ஆழம்காண முடிந்திடுமோ ஆழ்கடலை?
அடிமையாகிப் போனோரின் நிலையுணர்வீர்!

நிலையுணர்வீர்! போதைகொள்ளும் மானுடரின்
நிறைவில்லா வாழ்வுதரும் சீர்கேட்டை
விலைமதிக்க முடியாத உயிர்தம்மை
விளையாட்டா யெண்ணியவர் வாழலாமா?
தலைவிதியென் றெண்ணித்தான் வீழலாமா?
தடுமாற்ற மின்றிநீவிர் சிந்தித்தாலென்ன?
மலைபோல வரும்துயர் நீக்கிமண்ணில்
மகிழ்வோடு மனநிறைவாய் வாழ்ந்தாலென்ன?



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# வெயிலோடு உரையாடல்



காய்தல் உவத்தல் அன்றி
சமமாகத் தன்னை எல்லோர்க்கும்
அர்ப்பணித்துக் கொள்கிறது வெயில்

நிழலாகப் பார்த்துப்
பதுங்கி இருப்போரையும்
மறைவாக எங்கோ
ஒதுங்கி இருப்போரையும்
'வெளியே வா பார்த்துக் கொள்கிறேன்'
என்று காத்துக் காய்ந்து கொண்டிருக்கிறது வெயில்

வழிய வழிய போத்தலில்
எண்ணெய் ஊற்றி அனுப்பும்
கடைக்காரன்போல
உடல்முழுக்க வெம்மையூற்றி நிரப்பி
அனுப்பி வைக்கிறது வெயில்

வெளியூரிலிருக்கும் மகன் கடுதாசிக்காக
ஏங்கியேங்கித் தவிப்பதுபோல்
வாசல் திண்ணையிலிருந்தபடி
மழைக்காக வானத்தை
எட்டியெட்டிப் பார்த்து ஏமாந்து
உதடு சுளிக்கவைக்கும் சுள் வெயில்

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து
தானே பேசுபொருளாகித்
தன்புகழை எல்லோரும்
வேர்க்க விறுவிறுக்கப்
பாடவைக்கிறது வெயில்

வெயிலுடுத்துப் புறப்படுகிறான்
விடுமுறை நாட்களின்
விளையாட்டுக்கு ஆள் தேடும் சிறுவன்

வெயிலோடு பேசியபடி
போய்க்கொண்டிருக்கிறார் வண்டியோட்டி
வெயிலை இறக்கிவைத்து மொண்டெடுத்துக் கொடுத்துவிட்டு
வெயிலைத் தலைக்கேற்றி
வெயில் கைப்பிடித்து நடக்கிறாள் மோர் விற்பவள்

கைநழுவி விழுந்த வெயிலெடுத்துத்
தலையில் சும்மாட்டிடையே அழுத்தி வைத்து
வெயில் சுமந்து சாரத்தில் ஏறுகிறாள் சித்தாள்

வெயிலழகு வெயிலமுதம் வெயிலின்பம்
வெயிலன்பு வெயிலினிமை வெயிலருமை
வெயிலுக்கு வெயிலே இணை.

எஸ். வி. வேணுகோபாலன்

# இந்தியாவில் இருவரில் ஒருவருக்கு கொரோனா வரும்!

**நேர்காணல் :** நடிகர் பார்த்திபன் **சந்திப்பு:** கண்ணன்

தமிழ் திரையுலகில் முதல்முறையாக ஓடிடி தளமான அமேசான் பிரைமில் வெளியாகி, சரித்திரம் படைத்திருக்கிறது 'பொன்மகள் வந்தாள்'. இப்படத்தில் ஜோதிகாவுக்கு அடுத்த முக்கியப் பாத்திரத்தில் நடித்துள்ளவர் பார்த்திபன். அவரிடம் பேசினோம்.

'பொன்மகள் வந்தாள்' படத்தில் ஜோதிகா பாத்திரம்தான் முதன்மைப் பாத்திரம். ஆனாலும், எப்படி ஒப்புக்கொண்டீர்கள்?

'பொன்மகள் வந்தாள்' இயக்குநர் ஃபெட்ரிக்கின் முதல் படம். படத்தின் இணைத் தயாரிப்பாளர் ராஜசேகர்தான் என்னிடம் முதலில் பேசினார். "உங்கள் நடிப்புக்கு ஏற்ற ஒரு கதை வந்துள்ளது. நடித்தால் சிறப்பாக இருக்கும்" என்றார். இப்போது மட்டுமல்ல எப்போதுமே நடிக்கும் படங்களில் கதையில் எனக்கு முக்கியத்துவம் இருக்கிறதா என்றுதான் பார்ப்பேன். அப்படித்தான் 'ஆயிரத்தில் ஒருவன்', 'நானும் ரவுடிதான்' படங்களில் நடித்தேன். எந்த ஹீரோவுடன் வேண்டுமென்றாலும் நடிப்பேன். எனக்கு ஆணவமே கிடையாது. அப்படித்தான் 'பொன்மகள் வந்தாள்' படத்திலும் நடித்தேன்.

'ஆயிரம் வழக்குகளில் வெற்றி பெறும் ஒரு வழக்கறிஞர், நீதிக்காக வாதாடும் ஒரு பெண்ணின் எதிர்த்தரப்பு வழக்கறிஞராக சமூகமளிக்கிறார். ஆனால், நியாயம் அவள் பக்கம் இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டு ஒருமுறை நீதிமன்றத்தில் இவர் பேசாமல் இருக்கிறார். அந்தப் பெண் வெற்றிபெறக் காரணமே, இவர் பேசாமல் இருப்பதுதான். ஆயிரம் வழக்குகளில் பேசி வெற்றி பெற்றவர், இதில் மௌனத்தில் வெற்றி பெறுகிறார்'. இப்படத்தில் எனக்கு சொல்லப்பட்ட பாத்திரம் இதுதான். ஜோதிகாதான் பிரதான பாத்திரம் பண்ணப் போறாங்கன்னு தெரிந்தால்கூட, நான் என்ன பண்ணப் போகிறேன், என் பாத்திரம் பேசக்கூடிய அளவில் இருக்குமா என்றுதான் யோசித்தேன். அந்தவகையில் இந்தப் பாத்திரம் எனக்கு திருப்தியாக இருந்தது.

நெகட்டிவாக நடிப்பதென்பது என்னுடைய முதல் படத்திலிருந்தே தொடர்கிறது. எல்லோரும் எப்போதும் பாஸிட்டிவாக இருப்பதுமில்லை, நெகட்டிவாக இருப்பதுமில்லை. இப்போது கொரோனா நெகட்டிவாக இருந்தால்தான் நல்லது, பாஸிட்டிவ் என்றால் பிரச்சினை. அதனால், நான் நெகட்டிவாக நடிப்பதில் கவலையே படமாட்டேன். மக்களுக்கு நான் என்ன பாத்திரத்தில் நடித்தாலும், பார்த்திபன் என்ன சொல்லப்போகிறார் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது. அந்த எதிர்பார்ப்பு பூர்த்தியாகும் எனத் தெரிந்தால், உடனே இந்தக் கெட்டப் இப்படித்தான் இருக்கவேண்டும், இப்படித்தான் ஹேர்ஸ்டைல் வைக்கவேண்டுமென்று தயாராகிவிடுவேன். பாக்கியராஜ் சார்கூட படப்பிடிப்பில் பார்த்துட்டு, 'என்னையா 'ஒத்த செருப்பு' படத்தில் வேறுமாதிரி இருந்த, இதுல வேற மாதிரி இருக்க. தலைமுடியெல்லாம் இவ்வளவு இருக்கிறது' என்றார். 'உங்கள் தலையில் நிறைய மூளை இருக்கிறது. என் தலையில் நிறைய முடி இருக்கிறது' என்றேன்.



அரசு தரப்பு வழக்கறிஞராக நடித்துள்ளீர்கள், என்ன மாதிரியான முன் தயாரிப்புகள் செய்தீர்கள்?

இதற்கு நான் எந்த முன் தயாரிப்பும் செய்யவில்லை. 'ஆயிரத்தில் ஒருவன்' மாதிரியான ஒரு படத்திற்கு முன் தயாரிப்பு பண்ணுவேனே தவிர மற்றபடி மற்ற படங்களில் கதாபாத்திரத்தைச் சொல்லும் போதே மனதில் பதிந்துவிடும். ஒருவித புது ஸ்டைலை நானே உருவாக்கிக் கொள்வேன். மிகவும் கம்பீரமானவன். எல்லா வழக்கறிஞரும் அவனது தரப்புக்காகத்தான் வாதாடுவர். ஆனால், இதில் ஒரு பெண்ணின் பிரச்சினையைத் தீர்க்க விட்டுக்கொடுத்து கதாநாயகனாகி விடுவான். எனக்கு அது புரிந்ததால் கம்பீரம் குறையாமல் பண்ணவேண்டும் என்று மட்டும் முடிவாகிவிட்டேன்.

### ஜோதிகா பற்றி?

ஜோதிகாவைப் பற்றி சொல்லவேண்டும் என்றால் பத்தி பத்தியாகத்தான் சொல்லவேண்டும். எத்தனை பத்தி வரும் என்று சொல்ல முடியாது. இது ஒட்டுமொத்த பெண்களின், பெண் குழந்தைகளின் பிரச்சினை. ஜோதிகா அட்டகாசமாகப் பண்ணியிருந்ததைப் பாராட்டி அவருக்கு ஒரு கடிதமும் ஒரு குரல் குறிப்பும் அனுப்பினேன். அதில், "அசோக சக்கரத்தில் நான்கு சிங்கம் இருக்கும். நான்கு சிங்கமாக நாங்கள் நடித்திருந்தாலும், அதற்குத் தூண் நீங்கள்தான்" என்றேன். அதுதான் உண்மையும்கூட. அப்படத்தில் ஓர் உதவியாக இருந்தேன் என்பதில் மகிழ்ச்சி.

நான் ஜோதிகாவை அவரின் திருமணத்தில் பார்த்திருப்பேன், விழாக்களில் பார்த்திருப்பேன். பேசினது ரொம்ப அதிகம் இல்லை. படப்பிடிப்பு போனதும், "உங்கள் எதிரில்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)


EDUCATION

**Review Questions 20-12**

➤ ADVANCED FUNCTIONS 12

(i) If $\sin\frac{x}{2} = \frac{3}{5}$, $0 \le x \le \frac{\pi}{2}$, Evaluate,

(a) $\cos x$ (b) $\tan x$ (c) $\sin\left(\frac{x}{4}\right)$

(ii) If $\tan x = 1$ and $\sin y = \frac{24}{25}$

with x and y interval $\left(0, \frac{\pi}{2}\right)$, evaluate

(a) Csc (x + y) (b) sec (x − y)

➤ CALCULUS & VECTORS

Determine the dimensions of a largest rectangle that can be inscribed in a parabola

$f_{(x)} = -4x^2 + 12x$

➤ DATA MANAGEMNENT

Kevin gives his birthday party for seven of his twelve friends.

a) In how many ways can he choose his seven friends

b) In how many ways he can choose if two of his friends will not attend together

**Answer Key :**

➤ ADVANCED FUNCTIONS 12

(i) (a) $\cos x$ (b) $\tan x$ (c) $\sin\left(\frac{x}{4}\right)$

$\sin\left(\frac{x}{2}\right) = \pm\sqrt{\frac{1-\cos x}{2}}$ ; $\frac{3}{5} = \pm\sqrt{\frac{1-\cos x}{2}}$

$\frac{9}{25} = \frac{1-\cos x}{2}$ ; $\cos x = \frac{7}{25}$

$\therefore \tan x = \frac{24}{7}$

$\sin\left(\frac{x}{4}\right) = \pm\sqrt{\frac{1-\cos\left(\frac{x}{2}\right)}{2}}$

$\sin\left(\frac{x}{4}\right) = \pm\sqrt{\frac{1-\left(\frac{4}{5}\right)}{2}}$ ; $\sin\left(\frac{x}{4}\right) = \pm\sqrt{\frac{1}{2}}$

(ii) If $\tan x = 1$ and $\sin y = \frac{24}{25}$

with x and y interval $\left(0, \frac{\pi}{2}\right)$, evaluate

(b) Csc (x + y) (b) sec (x − y)

*Ans: HINT - use double angle formulas for sin (x + y) and cos (x+y) to solve*

➤ CALCULUS & VECTORS

$f_{(x)} = -4x^2 + 12x$

$= -4x(x-3)$, zeroes are 0 & 3



Consider the length of the rectangle 2a

Point X ((1.5-a), h)

$f_{(1.5-a)} = h = -4(1.5-a)^2 + 12(1.5-a)$

$h = -4a^2 + 9$

$width = 2a$

$Area = (-4a^2 + 9)2a$

$\frac{d_A}{d_a} = (-24a^2 + 18)$

$-24a^2 + 18 = 0$ ; $-6(4a^2 - 3) = 0$

By solving a = 0.87 ; 2a = 1.74

By substitution h = 5.97

∴ dimensions 1.74 x 5.97

➤ DATA MANAGEMNENT

(a) The number of Kevin chooses his friends, $^{12}C_7$

(b) number ways both together

$^{12}C_6$

Number of ways without one attend


$^{12}C_{11}$

Total number of ways both not attend together $= {}^{12}C_6 + {}^{12}C_{11}$

☎ 647 341 3976
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# தந்தையர் தினம்



யதுசனா சவுந்தரராசா
அகவை 18

வானளவாய் வளர்ந்து கிளைபரப்பி செழித்தோங்கிப் பெரு விருட்சமாய் இலைகள், நறுங்கனிகள், வர்ணஜாலம் காட்டும் பூக்கள் என ஒய்யாரமாக வீற்றிருக்கின்றது மரம். அம்மரத்தைத்தாங்கி அது உயிர் வாழ நீரைத்தேடிப் பாறைகளையும் துளைத்துச் சென்று தான் உயர்வடையாது கீழ் நோக்கிச் செல்கிறது இருளின் போர்வையில் கிடந்து மரத்துக்கு ஒளி சேர்க்கும் வேர். குடும்ப விருட்சத்தில் வேராகத் தந்தை.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிகப் பெரும் செல்வாக்குச் செலுத்துவது அவனது தாய் மற்றும் தந்தையே. தாயின் அன்பு வெளிப்படையானது, அனைவராலும் பேசப்படுவது, போற்றப்படுவது. ஆனால் ஒரு குழந்தையை பூரண மனிதனாக்குவதற்கு, இவ்வுலகை அறிமுகப்படுத்தி, அறிவை ஊட்டி அவனது வாழ்வு எனும் சிற்பத்தைச் செதுக்கும் சிற்பியாய் திகழ்ந்து, கடலின் அமைதி போலவே தன் ஆழமான அன்பையும் அகத்தினுள்ளேயே வைத்துக் கடந்து செல்கிறார் தந்தை.

வாழ்க்கையின் அர்த்தம் போதிக்கும் மகான்களான தந்தையர் போற்றப்பட வேண்டியவர்கள். ஒரு தந்தை என்பவர் தன் பிள்ளையின் உயர்வுக்குப் படிக்கட்டாய் இருப்பவர். தன் குடும்பம் வெளிச்சத்தில் இருக்க மெழுகுவர்த்தியாய் உருகிப் போனவர். தான் தொலைத்த கறுப்பு வெள்ளைக் கனவுகள் போலல்லாது தன் பிள்ளையின் வர்ண மயமான கனவுகளை நனவாக்கி இன்புறுபவர். தந்தையின் பெருமை கூற வார்த்தைகள் போதாது. அத்தகைய தந்தையின் மகத்துவத்தைப் போற்றி தந்தைக்கோர் தினமாக சர்வதேச தந்தையர் தினமானது ஆண்டுதோறும் ஆனி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படுகிறது. தந்தையர் தினத்துக்கு ஒரு வரலாறு உண்டு.

1907ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஆறாம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு வேர்ஜீனியா பகுதியில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 360இற்கு மேற்பட்ட ஆண்கள், சிறுவர்கள் இறந்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறார்கள் இதனால் தந்தையை இழந்தனர். இவ்விபத்தில் இறந்த தன் தந்தையினதும் ஏனைய தந்தையரதும் நினைவாக வழிபாடு நடத்த வேண்டும் என திருமதி Garce Clayton கேட்டுக் கொண்டார். இதற்கிணங்க 1908ஆம் ஆண்டு ஆடி மாதம் 05ஆம் திகதி Central United Methodist Churchஇல் முதல் முறையாக தந்தையர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் பிற்பாடு 1909ஆம் ஆண்டு Sonora Louise Smart Dodd என்னும் பெண்மணி அன்னையர் தினம் கொண்டாடுவது போல தந்தையருக்கும் அந்தத் தினத்தை சிறப்பாகக் கொண்டாட முடிவெடுத்து அதை பிரபலமாக்கினார்.



இப்பணியில் தந்தை William Jackson Smart என்பவர் அமெரிக்காவின் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1862இல் வோஷிங்டன் அருகே குடும்பத்தோடு வாழ்ந்து வருகையில் மகளுக்கு 16 வயதாக இருக்கையில் அவரது மனைவி Ellen Victorio மரணித்தார். அதன் பிற்பாடாக தனது ஐந்து மகன்களையும் மகளையும் தனி ஓர் ஆளாக வளர்த்து ஆளாக்கினார். தியாகச்சுடரான தன் தந்தையை கௌரவிக்கக் கடுமையாக முயன்றார் Sonora. 1972ஆம் ஆண்டு தந்தையர் தினத்தை தேசிய தினமாக்கும் பிரகடனத்தில் கையெழுத்திட்டார் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சட் நிக்சன். அன்று முதல் ஆண்டுதோறும் ஆடி மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது தன் பிள்ளை அழகாகப் பட்டுடுத்த, தான் கந்தலையும், மகன் அறுசுவை உணவு உண்ண, தான் அரை வயிறு கஞ்சி குடித்தும், தன் பிள்ளை அழகாக வாகனத்தில் வலம் வருவதற்குத் தான் துருப்பிடித்த மிதிவண்டியை வைத்து மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த இந்த நடமாடும் தெய்வங்கள் தெய்வத்திலும் மேலானோர்.

தம் கனவுகள் நிறைவேறாதது போல் தம் பிள்ளைகளின் கனவுகளும் கலையக் கூடாது என்பதும் தாம் பட்ட கஷ்டங்களை தம் பிள்ளைகள் படக்கூடாது என்பதுமே ஒவ்வொரு தந்தையினதும் அடிப்படை வேதமாக உள்ளது.

தன் பிள்ளை செங்கம்பளத்தில் நடக்க வேண்டுமெனக் கல்லிலும் முள்ளிலும் தன்னை கரைத்து உழைக்கின்றனர் தந்தையர். தந்தையின் தோள்மீது அமர்ந்திருக்கையில் அவரின் முக்கியத்துவத்தை உணராத மகன், தன் தோளில் தன் மகன் அமர்ந்திருக்கையில் புரிந்து கொள்கிறான். தந்தை எனும் ஸ்தானம் எவ்வளவு மகத்தானது என்பதை தந்தை எனும் புனிதமான மனிதக்கடவுள் மகத்துவமறியாத மானிடரும் இருக்கவே செய்கின்றனர்.

இவ் அவனியில் தன்னைப் பற்றிக் கவலைப்படாது தன் பிள்ளைகளுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவரை முதுமையில் உதாசீனம் செய்யும் பிள்ளைகள் எத்தனையோ பேர். தன் பிள்ளை படிப்பதற்குத் தரமான பள்ளியை தேடி அங்கு பிள்ளையைச் சேர்த்துப் படிக்க வைத்ததன் பலன் பிள்ளைகள் தரமான

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



Math tutorial 411

Answers to tutorial 410

1)L C M of 2,3.,4,5,6 is 60, when you divide the number by 2 ,3,4,5,6. The remainders are 1,2,3,4,5 . The remainder has a difference of 1 always ,so the required number is 60-1=59

2)$3^{9029}$, $3^{1*}$=3 , again $3^{5}$=243 , so agfter every 4 terms the last digit is 3

Divide 9029 by 4 ,remainder is 1,so the last digit is $3^{1}$=3 , if it is $3^{40}$ remainder is 0r is 0 , so the last digit is $3^{0}$ =1

3)A five digit palindrome will be of the form A B C BA. Acan be any one of 9 digits B& C can be any one of the 10 digits. Hence there are9x10x10x1x1 =900 palindromes between 10000 and 99999 inclusive .Since there are90000 five digits integers greater than or equal to10000, then 90000-900 =89100 of them are not palindromes

4)π: 2x –y+3z -24 =0 , Let x= s , z=t

Therefore y= -24 +2s +3t .A vector equation is

$\bar{r}$=(0 , -24 ,0)+s(1 ,2 ,0 ) +t(0 ,3 ,1 )

5)C = 4000 +h/15 +(15000000)/h

dc/dh =1/15 –(15000000)/$h^2$

set dc/dh =0 ,then h=15000 ,minimum cost = $6000/h

Tutorial 411

Questions

1)Find the distance from the point (4 ,7) to the line 6x+3y -10 =0

2)Determine the vector equation of the plane parallel to the yz plane containing the points (6 ,4 ,2)

3)What is the scalar equation of the plane that contains the x-axis and the point (4 ,-2 ,1)

By Mr S.F.Xaviert (Teacher)

6473409490/4167322228

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14Th AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. Entrance, Parking. Close to 24 hours bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MARKHAM & ELLESMERE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 small family or preferably two females. no smoke or no pets. Avail. July 01, 2020
தொடர்புகளுக்கு: **647-675-4799.**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt apartment for rent. Sep. entrance. Close to walk in 5 minutes to TTC & YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.893.1449**

**MARKHAM & PAINTER POST**
2 Bedroom bsmt for rent. 1 parking. Small family or couple preferred. No smoking or No pet. Not for student.
தொடர்புகளுக்கு: **(416) 414 - 2083**

**MARKHAM & DENISON**
3 Bedroom new bsmt for rent. Sep. entrance, parking. Family preferred. Close to Bus & school. Avail. July 01, 2020
**416.829.3212 / 416.879.9603**

**9TH LINE &16TH AVENUE**
Newly renovated 2-bedroom bsmt for rent. Sep entrance. Parking, laundry. 5 mins to transit, schools. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **(647) 395-5914**

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 Parking. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416-836-5284**

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Family Preferred. No smoke or no pets. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.998.8156**

**HWY 7 & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to all facilities. Avail. July 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**MORNINGSIDE & LAWRENCE**
3 bedroom , 2 washroom walkout basement for rent along with parking and laundry. Close to school & shopping centers. No smoking & no pets. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.981.1997**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**Jey - 416.816.9011**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
1 Room for rent. Rent $550. Parking, Speed internet. Good for a single Bachelor. Close to all facilities. Avail. July 15, 2020.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**MARKHAM & 14Th AVENUE**
1 bachelor Bedroom for rent. Parking, laundry, utilities. Close to school, shops, park, & YRT. Avail. July 01, 2020.
**(647) 500-4564 / (905) 472-1370.**

**DANFORTH & EGLINTON**
1 Room for rent with attached bathroom in main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.838.6636**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. Entrance, laundry & WIFI. Close to 10 min away from TTC. Preferred for couples. No smoke or no pets. Working people are ok. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.7320**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent, Living room, Full washroom, laundry, parking, Sep. Ent. No pet or no smoking. Close to all facilities. Avail. immediately.
**K Aloysius - Broker, Royal Lepage Vision Realty Inc., 416.993.9709**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
One Bedroom Bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
**Contact:**
**647.648.6240/647.609.2520**

## BASEMENT FOR RENT

**NEILSON ROAD & FINCH AVE.EAST**
One Bedroom Basement unit for Rent. Sep. entrance, Including all the utilities, Internet & laundry. No smoking. Single person preferred. Avail. from July 1st-2020,
**Contact: 416-835-0273**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது
அழையுங்கள்.
**647.861.8240**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
In a 3 bedrooms basement for rent. Each bedroom will be rented separately. Male preferred. Parking, laundry. Close to all Lawrence road & TTC bus stop.
தொடர்புகளுக்கு: **365. 338. 3406**

## CONDO FOR RENT

**BIRCHMOUNT & HIGHWAY 7**
1 room plus a den condo for rent. Balcony can be used as storage. Garage parking. Close to bank, grocery & other facilities. Bus stop walking distance from the building. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

## BASEMENT FOR RENT

**NEILSON &SHEPPARD**
2 Bedroom walkout bsmt for rent. Living room, 4 piece & 2 piece washroom, laundry, parking. No pet or no smoking. Close to all facilities. Avail. July 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.804.3721**

## BASEMENT FOR RENT

**DIXIE & SANDLEWOOD (BRAMPTON)**
One Bedroom Basement for Rent with sep. entrance. Close to hwy 410, soccer centre, bus stop & shopping centers. 1 parking, laundry. Single or couple (preferred couple ). Avail. Immediately.
**647-622-3794/ 647-712-2441**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking,laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.219.6062**

## HOUSE / BASEMENT FOR RENT

**SHEPPARD BETWEEN MCCOWAN**
3 bedrooms house/ 2 bedrooms basement for rent. 2 Bathrooms, sep. entrance, sep. laundry. Steps Away from the TTC & Elementary School. Close to Scarborough Town Center and Centennial College. No Pet.
Contact: **416.904.2844**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms 1 washroom Two-story Townhouse for rent. Living & dining room, kitchen, private terrace, parking & Sep. laundry room. Close to all major supermarkets, 401 and all amenities, one minute walk to TTC. Avail. July 01, 2020
**416-832-0982 / 647-785-3046**

மேலும் பக்கங்கள் 15, 16

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
2 bedroom house 1 washroom, Kitchen, Living room, Double Garage, parking. Close to library, Schools, bus route.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

**NEILSON & MCLEVIN**
3 Bedroom & 2 washroom house for rent. 2 Parking, laundry. Close to mall, school & Bus stop. Avail. July 01, 2020
தொடர்புகளுக்கு: **647.773.7086**

**MIDLAND & MCNICOLL**
3 Bedroom & 2½ washroom house for rent. Close to school, Bus, Shops & all facilities. Available Immediately.
**Call : 416-949-5697**

## HOUSE / BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**
3 bedrooms full house for rent. Avail. July 01, 2020. 2 bedrooms &1 washroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## HOUSE FOR RENT

**ELLESMERE & SCAB.GOLF CLUB**
3 Bedroom banglow house for rent. Parking. Rent+utilities. No pets or no smoke. Close to all facilities. Avail. immediately.
**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
3 Bedroom & 2 washroom House for Rent / sale. Convenient location
**Please contact for further details:**
**416.648.7283**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINGTON**

1 Bedroom for rent in 2 bedroom apartment. Living with one person, shared kitchen & bathroom. No pets. Parking is avail. for extra cost. Walking distance to TTC, Kennedy Station, Kennedy GO, groceries. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **(647) 765-4924**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**

1 Rooms for rent in an Apartment with furniture. Parking, internet. No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.276.6884**

## CONDO FOR RENT

**MARKHAM & ELLESMERE**

1 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.404.2586**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

மேலும் பக்கங்கள் 14, 16

## HOUSE FOR RENT

**MARKHAM & 14TH AVE**

3 bedroom & 2 1/2 washroom house for rent. Rent + utilities. Parking, laundry. Family preferred. Close to all facilities. Avail. July 01, 2020.

தொடர்புகளுக்கு: **416-209-7666**

## HOUSE FOR RENT

**BRIMLEY & EGLINTON**

(TOP-LEVEL AND BASEMENT ARE SEPARATE)

**Top Floor:** 3 Bedrooms, 1 Washroom, 1 Kitchen **Basement:** 2 Bedrooms, 1 Washroom, 1 Kitchen, & Sep.entrance. Close to TTC bus, schools & grocery.

**Please call or message Victor at**

**(647) 406-2999**

## HOUSE FOR SALE/RENT

**SCARBOROUGH**
**SHEPPARD & McCOWAN**

2 Bedroom condo apartment with one parking for sale $299,900.00

**AJAX**
**HARWOOD & KINGSTON**

3 bedroom brick detached bungalows with finished basement apartment with 3 bedrooms. for sale

**$600,000.00**

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## பராமரிப்பாளர் தேவை

**MARKHAM & FINCHக்கு**

அருகாமையில் வாழும் 77 வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்தோ அல்லது பகுதி நேரமாகவோ பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு: **416.562.9275**

## பராமரிப்பாளர் தேவை

மார்க்கத்தில் Stouffville hosptial லுக்கு அருகாமையில் வாழும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்தோ அல்லது பகுதி நேரமாகவோ பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாக தேவை. Only female caregiver needed ASAP in Markham.

தொடர்புகளுக்கு: **416-834-3568**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. Full time LIVE-IN caregiver (female) needed asap in Scarborough.

தொடர்புகளுக்கு: **437.223.7767**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு: பிறேம்-**647.835.5244**

## மணமகன்கள் தேவை

இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழும் இந்து வேளாளர்குல, 1987இல் பிறந்த 12இல் செவ்வாய் உள்ள மணப்பெண்ணுக்கும், 1988இல் பிறந்த 4இல் செவ்வாய் உள்ள மணப்பெண்ணுக்கும் கனடாவில் மணமகன்களை தேடுகின்றோம்.

KarunTharuma: **416.407.7787**
**WhatsApp : +1 416.407.7787**
**karunntk@gmail.com**

## திருமணசேவை

திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## ஆலய முகாமையாளர் தேவை

ரொறொன்ரோவில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயம் ஒன்றிற்கு ஆலய முகாமையாளர் (Manager) தேவை. தமிழிலும், ஆங்கிலக்திலும் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும். இருப்பிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **647-762-5804**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**

2 Rooms For Rent in a walkout basement. Close to all facilities. Avail. July 01, 2020.

தொடர்புகளுக்கு: **647.888.9437**

## BASEMENT FOR RENT

**Scar. Golf Club Rd & Kingston**

Fully furnished 1-bedroom walkout basement with lots of sunlight, huge living room, dining room with hardwood floor for rent along with parking and laundry. Minute walk to bus & shopping, Tamil caterings centers. No smoking & no pets. Available June 01, 2020.

தொடர்புகளுக்கு: **647-680-6704**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**

Room for Rent in Markham. Close to Bus stop. Utilities included. Avail. Immediately.

**Contact : Baskaren +1 (437) 344-1589**

**Baby : 416.522.3314**

## HELP WANTED

**Delft Interlock Specialist Inc.**

Needs employees for manual labour (landscaping) Targeted for those between the ages of 20 - 40 Payments vary, details can be worked out over a phone call Call by deadline date: July 01st 2020.

Contact info: **Kannan Ramanathan**

Contact Number: **(416) 828-5086**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA. Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**




## TAILORING

**SCARBOROUGHஇல்**

Saree Blouses $25க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

* ***Scarborough* - Ellesmere / Military trail – Bsmt**
Room For Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. **[Asking $520/m]**

* ***Scarborough* – Ellesmere Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $560/m]**

***Scarborough* – Ellesmere Rd / Brimley Rd – Bungalow – Main Fl**
(3 Brm +2 Bath) Near U Of T Scarborough / Centennial College. Utility 70% . Close to Ttc & Hwy 401. **[Asking $2300]**

* ***Bowmanville* – Hwy 401 / Hwy 2 – Detached – House**
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.**[ Call 647-913-9241]**

***Toronto* – Jarvis / Dundas- Condo Apt**
Brand new Studio Condo with Locker & Balcony. Located in the Heart of Toronto. Steps from Ryerson university, George Brown College**[$1650]**

***Scarborough* - *Morningside* / Sheppard – Detached – Rooms**
One Room available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital.**[ Call 647-913-9241]**

* ***Brampton* – Dixie Rd / Countryide Rd – Detached**
(4 Brm + 3 Bath) New Detached Home with Double Door Main Entry. Double Garage. Excellent Location. **[Asking $2800/m]**

* ***Brock* – Simcoe St / Mara Rd – Detached House**
(4 Brm + 3 Bath) New Home! Double Garage. Close To Lake Simcoe & Parks. **[Asking $1800/m]**

***Scarborough* – Mccowan / Hwy 401 – Condo Apt**
(2 Brm + 2 Bath) Spacious Unit. 1 Parking & 1 Locker. Walk to Stc, YMCA, Ttc **[Asking $2450/m]**

***House for Sale in Jaffna* – Near Kacheri, St.johns College, Chundikuli.**
High demand rental area. Well maintained house in a Land about a quarter Acre. CDN-$200,000.Clear Title. **Call Karu 416-616-7278**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீடுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புபவர்கள்

**தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555**

watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**

watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES

watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!

## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

## *You can relax while we take care of your investment property!*

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

# கவலை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

பொருளை, இந்த அழியும் பொருளால் அனுபவிக்க முடியும், என்பதுதான் அது. இரண்டும் பிரியும்போது, அழிவற்ற பொருள், இந்த உடலில் இருந்து பிரிந்து விடும். இந்த உடல், உலகின் அழியும் பொருள்களோடு கலந்துவிடும். இந்த உடலில் அந்த அழியாப்பொருள் குடியிருக்கும்வரை, நாம் அதனை அனுபவிக்க முடியும். இதுதான் வாழ்க்கை. இதுதான் அந்த சந்தர்ப்பம். இந்த அனுபவம், இந்த உணர்தல்தான், உங்கள் வாழ்க்கையின் வெற்றியாகும். இந்த இணைதல் இருக்கும் வரை இது சாத்தியமாகும். ஒரு நாள், அந்த இணைப்பு இல்லாமல் போய்விடும். அதன்பின் என்ன நடக்கும் என்பது ஒருவருக்கும் தெரியாது. அதற்கு ஒரு உத்தரவாதமும் இல்லை. நீங்கள் இந்த உலகத்தை விட்டுப் போகும்போது ஒருவரும் உங்களோடு வரப்போவதில்லை. அவர்கள் விரும்பினால் கூட அவர்களால் உங்களுடன் வரமுடியாது.

மனிதர் விமானத்தில் பயணிக்காத காலங்களில், கடவுளும் தேவதைகளும் மேகக் கூட்டங்களுக்குள் இருப்பதாகக் கூறிக் கொண்டனர். இப்பொழுதோ, நாம் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்து விட்டோம். நான் விமானத்தில் பயணிக்கும்போது, வானத்தில் எந்த தேவதையையும் காண வில்லை. நான் இறந்தபின், என் ஆன்மா இங்கு செல்லும். நான் சொர்க்கத்துக்குப் போவேன். நரகத்துக்குப் போவேன், என்றெல்லாம் நீங்கள் நம்பலாம். நீங்கள் எதனை நம்பவேண்டும் எதனை நம்பக் கூடாது என்பதை எல்லாம் நான் சொல்ல வரவில்லை. ஆனால், இதுதான் விடயம். இந்த உடல் இருக்கும்வரை, நீங்கள் இந்த அழியாப்பொருளை அனுபவிக்கலாம். அந்த அனுபவத்தை நீங்கள் எப்படியும் அழைக்கலாம். அமைதி என்றும் அழைக்கலாம். ஏனென்றால், இந்த அனுபவம் உங்களில் அந்த அமைதியைக் கொண்டு வரும். இதைவிடுத்து வெளி விடயங்களை எண்ணி நிம்மதியை இழக்கிறோம். மழை பெய்கிறதென்றால், ஒரு குடை இருந்தால் உதவும் அல்லவா? நமக்கு இடித்து இடித்து இவ் உலகம் புகட்டுவது எல்லாம், இப்படி செய்யுங்கள், அப்படி செய்யுங்கள் என்பதைத்தான். அதை எல்லாம் விட்டு விடுங்கள். எமக்கு இரண்டு காதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான விடயங்களை ஒரு காதால் கேட்டு, மறு காதால் வெளியில் விட்டு விடுங்கள்.

சிலர் சொல்வர், தாம் பார்வைக்கு அழகற்றவர்களாக இருக்கிறோம். நம்மை அவர்



களுக்கு பிடிக்காது என்றெல்லாம் கூறுவர். ஒரு காகத்துக்கு நீங்கள் அழகாகத் தோற்றமளிப்பீர்களா? இல்லை. காகத்துக்கு இன்னொரு காகம்தான் அழகாக தெரியும். அதேபோல், ஒரு குரங்கிற்கு நீங்கள் அழகாகத் தெரிவீர்களா? இல்லை. இன்னொரு குரங்கைத்தான் அது அழகு என்று நினைக்கும். ஆக, உங்களை ஒருவர் அழகில்லை என்றால், அது அப்படி சொல்பவரைப்பற்றிதான் விளக்கு கிறதே ஒழிய உங்களைப் பற்றியல்ல. இறைவன் படைப்பில், எல்லோரும் அழகானவர்கள். அழகு என்பது முகத்தில் இல்லை. நம் கண்களில் இருக்கிறது. நம் புன்னகையில் இருக்கிறது.

நாம் எல்லோருமே அந்த சுற்றிவரும் திருகைக் கல்லில் அகப்பட்டு அரைபட்டுக் கொண்டு இருக்கிறோம். திருகை கல்லைப் பற்றித்தான் நாம் எல்லோரும் பேசுகிறோமே ஒழிய, நடுவில் இருக்கும் தண்டைப் பற்றி பேசுவதில்லை. அத்தண்டாக இருங்கள். அந்த அழியாப் பொருளுடன் இணைந்து இருங்கள். அப்பொழுது அரைபடமாட்டீர் கள். அந்த இணைப்பில் இருங்கள். அதற்காக பிரச்சினைகள் வராது என்பது பொருள் அல்ல. மழை வரும். ஆனால், மழை வரும்போது, அந்த ஞானம் எனும் குடையை விரியுங்கள். நனைய மாட்டீர்கள்.

# தந்தையர்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

முதியோர் இல்லம் தேடித் தந்தையைச் சேர்த்து விடுகின்றனர். பாலர் வகுப்பில் தன் பிள்ளை வீட்டுக்கு வருகிறேன் என அடம்பிடித்து அழுகையில் தன் கண்ணீரை கண்ணினுள் புதைத்துப் பிள்ளையிடம் விடைபெற்று மகன் படிக்கத் தொடங்கி விட்டான் என ஆனந்தத்துடன் வீடு சென்ற தந்தையை முதியோர் இல்லத்தில் கண்ணீர் சிந்த விட்டு திரும்பி பார்க்காமல் செல்கிறான் நன்றிமறந்த தனயன். வாழ்க்கை கொடுத்த தந்தை வாழ்வின் இறுதிக் காலத்தில் அழுந்தும் போது அவரை உதாசீனம் செய்யும் பிள்ளை கொடிய விஷத்திலும் கொடுமையானவன்.

உழைத்து உழைத்துக் காய்த்த தந்தையின் கையிலேயே பிள்ளையின் எதிர்கால மானது பூப் பூக்கிறது. குழந்தைகளுக்குப் புதியதொரு உலகத்தைக் காட்டுபவர் அப்பா. ஒரு குழந்தையின் வாழ்வில் தந்தையின் பங்கு அளப்பரியது.ஒவ்வொரு பிள்ளையும் ஏறத்தாழ இருபத்தைந்து வயது வரையிலும் தன் தந்தையின் தியாகங்கள், உழைப்பு என்பவற்றாலே தைரியமாகத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து தன்னம்பிக்கையுடன் வாழ்கிறான். அத்தகைய புண்ணிய ஆத்மா குடும்பத் துக்காகத் தன்னையே உருக்கி ஒளி கொடுக்கின்றார். இத்தகைய தியாகச் செம்மல்களை இறுதிவரை கண்கலங் காது மனம் நோகாது எம் கண்ணுக்குள் வைத்துப் பார்க்க வேண்டியது நம் கடமையாகும்.


எல்லா பிள்ளைகளும் தம் தந்தையில் பாசம் வைத்துள்ளனர். ஆனால் பெரும் பாலானோர் அதனை வெளிப்படுத்துவ தில்லை. வெளிக்காட்டப்படாத அன்பு இருந்தும் பயனற்றது. ஒவ்வொரு தந்தை



Grace Clayton

யும் தம் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது பணமோ, வசதிகளோ அல்லது வேறெந்த ஆடம்பர விடயங்களோ அல்ல. தான் மழையாய்ப் பொழிந்த அன்பைத் தன் பிள்ளை ஆயுள்வரை சிறு துளியேனும் திருப்பித் தருவானா என்பதையே. ஆகவே தந்தை மேல் அனைவரும் பாசம் வைத்திருப்பர். அதனை வெளிப்படுத்துகையிலேயே அவர் மகிழ்ச்சி அடைவார். தந்தையை இழந்த பலரும் தந்தை இருந்தபோது அவரது அருமை தெரிய வில்லை. இழந்த பின்பே தந்தையின் அன்பிற்கு ஏங்குகிறோம் என்பர். ஆகவே நம் கண்முன் காணும் கடவுளான தியாகத்தின் மறுவிம்பம் தந்தையை இன்றும் என்றும் கண் போன்று காத்து நிற்க வேண்டும். எனவே தந்தையின் அருமை பகரும் தந்தையர் தினமான ஜூன் மாதம் 21ஆம் திகதி அனைவரும் உங்கள் தந்தையரை ஆனந்தப்படுத்தி மகிழ இனிய தந்தையர் தின வாழ்த்து.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

### குடும்பம் அமைதி பெற

இணக்கத்தை வற்புறுத்தும்போதும், பிணக்கத்தை தீர்க்கும்போதும் இன்சொல்லையே உள்ளமும், உதடும் உபயோகப்படுத்த வேண்டும். இன்சொல்லினால் கெடுதல் ஒழிய நன்மைகள் பல பெறலாம்.

குடும்ப அமைதியைப்பெற, சலனமில்லாததும், விசாலமானதுமான மனம் வேண்டும். எதையும் தாங்கும் இதயம் என்பார்களே அது இங்கேதான் வேண்டும். பொறுமை, சகிப்புத்தன்மை இவை எல்லையின்றித் தேவையாகும். எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டு விடலாம்.

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும். அதேபோல் பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் அவை சொல்லப் படாததுபோல் பாவித்து ஒதுக்கிவிட வேண்டும். அப்போதுதான் அமைதி பிழைக்கும்.

தற்போது அம்மா-மகளுக்கிடையே கூடப் பிணக்குகள் தோன்றுவதையும், வளர்வதையும் பார்க்கிறோம். அவர்களுக்கிடையே கூட, விட்டுக் கொடுத்தல் (Adjustment) இல்லையானால் வேறு யாரிடம் அதைத் தேடுவது? அம்மாவுக்குப் பெண்ணாக இருக்கும்போதே இப்படி என்றால், பின்னால் வாழ்க்கை எப்படி அமையும்? அப்புறம் யார் மேல் குற்றம் சொல்வது?

தன் கருத்துச் சரியேயாயினும், உயர்வேயாயினும், வாழ்க்கைத் துணை ஒத்துக் கொள்ளவில்லையென்றால் அது எவ்வளவு அவசியமான கருத்தானாலும் ஞானமேயானாலும் சிறிது காலத்திற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளும்வரை தள்ளிவைக்க வேண்டியதுதான். குடும்ப அமைதியை இழந்து பெறுவது ஞானமேயாயினும் அதனால் ஒரு பயனும் வராது.

*- அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி*
*வாழ்க்கை மலர்கள்*

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)




யோகா சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
பலன் பார்த்தல் | சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## இயல் 02

## பிழைப்பும் உழைப்பும்

### 1. மீன்பிடி

இவ்வூரின் பிரதான பாரம்பரியத் தொழில் மீன்பிடியாகும். இத்தொழிலில் பாரம்பரிய மாகக் கைக்கொள்ளப்படும் நடவடிக்கை களாவன மீன்கூடு, கூடுகாவி, தூண்டில், கரைவலை, வீச்சு, கிளக்கன் அடித்தல் முதலியனவாகும்.

#### அ. மீன்கூடு

காட்டு மிருகங்களையும் பறவைகளையும் பொறிவைத்துப் பிடிப்பர் என்று இலக்கி யங்களில் படித்திருக்கின்றோம். காட்டில் தடம்வைத்துக் காட்டுக்கோழி, புறா என்பனவற்றைப் பிடிக்கும் சம்பவங்களை நேரிலும் பார்த்திருக்கின்றோம். பின்வரும் நற்றிணை, புறநானூற்று வரிகள் இவற்றை ஞாபகம் ஊட்டுகின்றன.

பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ (நற் 212:01).

கைம்மான் வேட்டுவன் கனைதுயின் மடிந்தென (புறம். 320:03).

இதைப்போன்று தந்தரமான முறையில் மீன் பிடிப்பதற்கும் பயன்படுத்தப்படும் 'பொறி' போன்றது மீன்கூடு. இலங்கையின் தென் பகுதிகளிலும் பிறநாடுகளிலும் ஈச்சந்தடி, பிரம்புத்தடி, மெல்லிய இரும்புக்கம்பி போன்றவற்றினாலும் மீன்கூடு இழைப்பர். ஆழியவளை மக்கள் ஈச்சந்தடியினால் மீன் கூடு இழைத்தனர். தற்போது இரும்புக் கம்பியினாலும் இழைக்கின்றனர். இது மிகவும் நுட்பம்வாய்ந்த ஒரு கைப்பணி ஆகும்.

காட்டில் வளரும் ஈச்சமரத்தின் தடியில் கூடு இழைக்கும் முறையாவது: ஓர் ஈச்சந் தடியை மூன்று நேர்பாதிகளாகப் பிளந்து அவற்றை மெல்லிதாக வார்ந்துசீவிப் பதமாக எடுத்த பின்னர், நிலத்தில் குந்தி இருந்தவண்ணம் மீன்கூடு இழைப்பர். மூன்று பகுதிகளாக இழைத்து, பின்னர் அவை முறைப்படி பொருத்திக் கட்டப்பட்டு முழுவடிவம் பெறும்போது அது 'கூடு' என்று பெயர்பெறும். கூட்டின் மூன்று பகுதிகளை அடித்தட்டு, மேல்தட்டு, சொக்கரை என்பர். 'சொக்கரை' என்பது கூட்டுக்குள் மீன் நுழையும் வாசல் பகுதி யாகும். இந்த வாசலினூடு உள் நுழைந்த மீன்வகை மீண்டும் வெளியேற மாட்டாமல் கூட்டினுள் (பொறி) அகப்பட்டுவிடும். மீன்களைப் பொறுத்தமட்டில் கூட்டின் கவர்ச்சி, நிழல் என்பன தமக்குப் பாதுகாப்பான இடம் என்று கருதியே அவை கூட்டினுள் நுழைகின்றன போலும்.

மீன்கூட்டினுள்ளே நான்கு மூலைகளிலும் ஒவ்வொன்றும் சுமார் அரைக்கிலோ நிறை கொண்ட கற்களைக் கட்டுவர். கூடு வீசப் படுகின்ற இடத்தின் கடல் ஆழத்திற்கேற்ப நீளங்கொண்ட பலமான கயிற்றைக் கூட்டின் முதுகில் கட்டி, மறு நுனியில் ஒரு மிதப்பைப் பொருத்திக் கட்டுமரத்தில் ஏற்றிச் சென்று கடலில் வீசிவிடுவர். மிதப்புப் பெரும்பாலும் ஒல்லித் தேங்காயா கவே இருக்கும். ஆண்கள் அதிகாலை வேளையில் கட்டு மரத்தில் முளங்கால் மடித்து இருந்து கொண்டு மூங்கில் சவளால் வலித்துச் சென்று ஒல்லி மிதப்பைப் பிடித்துக் கயிற்றை இழுத்துக் கூட்டைத் தூக்கிக் கட்டுமரத்தில் வைத்து, அதனுள் இருக்கும் மீன், கணவாய், நண்டு முதலிய வற்றை எடுத்துப் பறியிற் போடுவர். அதன் பின் கூட்டில் படிந்திருக்கும் அழுக்கு, கடற்பாசி, கணவாய்முட்டை என்பவற்றை அகற்றித் தூய்மைப்படுத்தி, மீண்டும் கூட்டைக் கடலில் வீசிவிட்டுக் கரைக்குத் திரும்புவர்.

இது யாருக்கும் கட்டுப்படாத சுதந்திரமான 'தனித்தொழில்' முயற்சியாகும். தனித் தொழில் என்பது முதலாளி தொழிலாளி கூலிப்பிரிவு இல்லாதது, முதலாளியும் அவர்தான், தொழிலாளியும் அவரேதான். பெரும்பாலும் இது அவர்களது குடும்பத் தொழிலாகும்.

கட்டுமரத்தைக் கடலுக்குள் தள்ளுவதற் கும், பின்னர் கட்டு மரத்தைக் கடற்கரை மண்திட்டியில் இழுத்துக் காயவிடுவதற்கும் மனைவிமார் துணைசெய்வர். ஆண்கள் கொண்டுவரும் மீனை, மனைவிமார் 'கறிப் பெட்டிக்குள்' வைத்துத் தலையில் சுமந்து சென்று சந்தைப்படுத்தித் தேவை யான பொருட்களுடன் மீள்வர். சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள பளை, ஆனையிறவுச் சந்தைகளுக்கு 1950களிலும் நடந்து சென்று மீள்வது வழக்கிலிருந்தது.

#### ஆ. கூடுகாவி

மீனுக்கு உணவுச்சேர்க்கையும் வதிவிட மும் அமைத்து, அதன் அருகில் கூட்டை வீசி மீன்பிடிக்கும் நுட்பமான மரபுவழி உத்தியைக் 'கூடுகாவித்தொழில்' என்று இவ்வூரில் கூறுவர். வடமராட்சி கிழக்கில் 'காவி' போடுதல் என்றும், வடமராட்சி மேற்காகிய பொலிகண்டி வல்வெட்டித் துறைப் பகுதிகளில் 'கறுப்பு' என்றும் அழைப்பர். இந்த இருபிரதேசக் கடல் நிலங்களின் பௌதிக இயற்கை அமைவு மாறுபட்ட தன்மை கொண்டவை. பருத்தித்துறையிலுள்ள 'பனைமுனைக்கு' மேற்குக்கடற் பகுதி முருகைக்கல் படிமங் கொண்டது. பனைமுனைக்குக் கிழக்குக் கடற்பகுதி (கற்கோவளம் கிராமத்திலிருந்து கிழக்குப் பக்கமாக) வெண்மணல் படிமங் கொண்டது. வடமராட்சி மேற்கில் இயற்கை யாகவே 'பார்' (கற்பாறை) அமைந்திருப் பதினால் 'கறுப்பு' என்றும், வடமராட்சி கிழக்கில் செயற்கையாகக் கடலடி நிலத்தை 'இருட்டுப்' படுத்துவதினால் 'காவி' என்றும் காரணப் பெயர்களினால் அழைக்கின்றனர்.

காவி கட்டும் முறையாவது: அசையாத பெரிய பாறாங்கல்லில் ஏறத்தாழ பதினைந்து பாகம் நீளமுள்ள பலமான கம்பான் கயிறு கட்டுவர். பின்பு அந்தக் கயிற்றில் இருபக்கமும், நேராகப்பிளந்த பச்சைத்தென்னை ஓலை, வாழைச்சருகு, நாவல்குழை, பனங்கிழங்குத்தோகை என்பவற்றை இறுக்கமாக வரிந்து கட்டுவர். கல்லுக்கு எதிர்முனையிலுள்ள நுனியில் ஒரு மிதப்பைக் கட்டுவர்.



இவ்வாறு, இத்தொழிலில் ஈடுபடும் ஒவ்வொருவரும் காவிகளைக் கடலின் அடியில் போட்டுவிடுவர். நாட்கள் செல்லச் செல்லக் காவியில் மீன் உணவாகிய கடல்பாசி, ஊத்தை, சிப்பி, சிறுசங்கு முதலியன பிடித்துவிடும். இந்தக்கடற் பரப்பின் அடிப்பிரதேசம் மீன்களுக்கு வாழ்விடமாகவும் உணவுச் சுரங்கமாகவும் மாறிவிடும். செயற்கையான இந்தக் காவி அமைப்பில் சேறு, பாசி, ஊத்தை படிவதினாலும் 'காவி' என்ற காரணப்பெயர் வந்திருக்கலாம். (பல்லில் வெற்றிலைக் காவி படிதல் என்ற வழக்கை நோக்குக.) இந்தக் காவிப் படுக்கையின்மேல் மிதப்பு கள் கட்டப்பட்ட கூடுகளை வீசிவிடுவார். அதிகாலையில், கட்டுமரத்தில் 'கூடு பார்க்கச்' செல்லும் கூடுகளின் உரிமை யாளர் துடிதுடிக்கும் உயிர்மீன்களைப் பறிகளிலும், குட்டான்களிலும் போட்டுப் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டுவந்து உணவுத் தேவையின் மிகுதியைச் சந்தைப்படுத்துவர்.

தொடரும்...

## சகலதையும் இழந்து உயிர்மட்டும்




அகதியெனும் வார்த்தைதனை அறியாதோர் - இந்த
அவனியிலே இருப்பாரோ? இல்லை ஆயின்
அகதியெனும் வார்த்தையை அறியாதோர் இருப்பரேல்
அது மாபெரும் அதிசயந்தான் அறிவிலாதவரா யிருப்பர்
சகதியிலே விழுந்த பண்டம் சமையலுக்காகிடுமோ?
சத்தியமாய் இல்லை அகதியும் அப்படித்தான்
சகலத்தையும் இழந்து உயிர் மட்டும் சுமந்து
சாவோடு போராடி நிதம் துன்புறுவோன் அகதி!

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை
உறங்கிடவும் நிலையான உறைவிட மில்லை
பண்ண ஒரு தொழிலில்லை, பணம், காசு இல்லை
பட்டதுயர் சொல்லியழ பாசமான ஆளில்லை
எண்ண மனதினில் ஏற்றதொரு தெளிவில்லை
எதிர்கால முடிவுகளை எடுக்கவும் முடிவதில்லை
கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல்
கதிரவன் முன் குருடனாகப் போகும் வழி புரிவதில்லை!

இனமொன்று இருக்கிறதா அகதியென இங்கு?
இடர்தந்து மாந்தரை வருத்திடுவோர் அரசியலார்
இனங்களுக் கிடையிலே வன்முறையைத் தூண்டி
இரத்தவாறு ஓடவைப்பார் நாட்டினிலே இவர்
மனங்களிலே இனவெறிதான் கொலுவிருக்கும்
மக்களைச் சூடேற்றி இவர் குளிர்காய்வார்
பனங்காட்டு நரிகளிவர் பதவியிலுள்ள குறவரிவர்
பைந்தமிழர் வாழ்வுதனை அகதி முகாமுக்குள் இட்டோவர்!

நாட்டிலே ஏற்படும் உள்நாட்டுப் போர்களினால்
நல்வாழ்வைப் பறிகொடுத்தோர் உலகிலே பல கோடி
காட்டிலே வாழுகின்ற மிருகங்கள் யாவும்
களிப்போடு சுதந்திரமாய் கவலையற்று வாழும்
ஏட்டிலும் எழுத்திலும் எழுதிட இயலுமாமோ?
ஏக்கமுடன் வாழுகின்ற அகதிகளின் துயர்தன்னை
வாட்டி வதைத்திடும் கொடுமைகள் தாங்கியவர்
வாழ்நாளில் இன்பத்தை தொலைத்திடல் நன்றாமோ?

இயற்கை அனர்த்தமும் இவரை விட்டு வைத்ததுவோ
இடி மின்னல், மழை, வெள்ளத்தால் அகதியானோர்
புயலடித்து வாழ்வைப் புரட்டியதால் அகதியானோர்
பூகம்பம் தந்த அழிவினால் அகதியானோர்
தயங்காது சீறிவரும் சுனாமியால் அகதியானோர்
தாவியெழும் தீ நாக்கில் சிக்கி அகதியானோர்
பயம் தரும் மதக் கலவரங்களில் சிக்கி அகதியானோர்
பலகோடிப் பேர் இந்தப் பாரினிலே வாழ்கின்றாரோ!



கவிஞர் புரட்சிபாலன் - வன்கூவர்

# நல்ல மனம் வாழும்! சிறுகதை



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை சலீம்பாய்க்கு. விடிந்ததும் அலமாரியைத் திறந்தார். பணக்கட்டு களை ஒவ்வொன்றாக எடுத்துத் தனது தோள்பையில் அடுக்கினார்.

காஃபி எடுத்துக் கொண்டுவந்த மனைவி சபீரா, "மகள் கல்யாணத்துக்காக வச்சிருந்த பணம். கொரோனா வைரஸ் பிரச்சினையால் ஆறு மாசம் கழிச்சு கல்யாணத்தை தள்ளி வச்சிருக்கோம். பேங்கும் அடைச்சிருக்கு. இப்போ ஏன் அலமாரியில் இருக்குற பணத்தை பையில வைக் கிறீங்க?" சற்று உரக்கவே கேட்டார்.

காஃபியை வாங்கிய சலீம்பாய், "சபீ, நாளையிலிருந்து எல்லாக் கடைகளை யும் அடைச்சிரணுமாம். நம்ம கடையை சுற்றி லும் வண்டியில் காய், பழம் விக்கிறவங்க, நடைபாதை வியாபாரிங்க, கூடையில் கீரை விக்கிற பொம்பளப் பிள்ளைகள், செருப்புத் தக்கிற வயசானவங்க, கூலித் தொழிலாளிங்க அப்படினு நெறைய பேர் இருக்காங்க. இவங்கள்லாம் தினம் வேலை செஞ்சு அந்த வருமானத்த வச்சுதான் சாப்பாடு, வீட்டு வாடகை மத்த செலவெல்லாம் செய்வாங்க. முன்னறிவிப்பு ஏதுமில்லாம கொரோனா தொற்று வரக் கூடாதுனு கடையை மூட சொல்லிட்டு வீட்டுக்குள்ளேயே இருக்கணும்னா என்ன செய்வாங்க? கைக்குழந்தைகளோட நெறைய தாய்மார்கள் கெழங்கு, மீன் எல்லாம் விக்கிறத பாத்துருக்கேன். இதை யெல்லாம் நெனச்சு ராத்திரி தூக்கமே யில்லை. அவங்களுக்கு நம்மால முடிஞ்சத செய்யணும். சாப்பாட்டுக்குத் தேவைப்பட்ற சாமான்களை மட்டும் இந்தப் பணத்துல வாங்கிக் கொடுத்துட்டு வந்துட்றேன். மக கல்யாணத்துக்கு நிச்சயம் ஏதாவது ஒரு வழி பிறக்கும்" காஃபி கிளாசை சபீராவிடம் கொடுத்துவிட்டு சாமான்கள் வாங்க பணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

பதிலேதும் சொல்லமுடியாமல் வாயடைத் துப் போய் நின்ற சபீராவின் மனதிற்குள் மகளின் கல்யாணத்துக்கு பணம் வேணுமே, என்ன செய்யப் போறோம், எப்படி நடத்தப் போறோம், மாப்பிள்ளை வீட்டுக்காரங்க என்ன சொல்லப் போறாங்களோ இப்படி அடுக்கடுக்கான கேள்விகள், கவலைகள். ஒன்றுமே செய்யப் பிடிக்காமல் சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார்.

செல்போன் சத்தம் கேட்டு மெதுவா எழுந்துபோய் எடுத்தால், அதில் மாப்பிள்ளையின் அம்மா பெயரைப் பார்த்ததும் மயக்கமே வந்துவிட்டது சபீரா வுக்கு. பேசாமலிருந்தால் நல்லாயிருக் காதே, ஆண்டவா இதென்ன சோதனை? ஆன் செய்து காதில் வைத்தவுடன், "சபீரா ஒரு முக்கியமான சேதி, கல்யாணத்துக்கு நீங்க ஒரு செலவும் செய்ய வேணாம்.



எல்லாம் நாங்க பாத்துக்கறோம். பொண்ணுக்கு நகைகள், துணிமணி உள் பட எல்லாமே எங்க பொறுப்புதான். கொரோனா தொற்று சீக்கிரமா போகட்டும். ரொம்ப சிம்பிளா கல்யாணத்த நடத்திரு வோம். நம்ம வழிப்படி மாப்பிள்ளை வீட்டில இருந்துதான் எல்லாமே செய்யணும். அதுதான் சிறப்பு. வேறென்ன சேதி?" என்றவரிடம், நல்ல சேதிய நீங்கதான் சொல்லியிருக்கீங்க, ரொம்ப சந்தோஷம். அவங்க வந்தவுடனே சொல்லிட்றேன். செல்போனை வைத்துவிட்டு கணவரின் வருகைக்காக காத்திருந்தார் சபீரா.

இவ்வளவு சீக்கிரம் மகள் கல்யாணத்துக்கு நல்ல வழி காண்பித்த இறைவனுக்கு நன்றியைக் கூறிக் கொண்டு, கொரோனா வைரஸ் விலகிட பிரார்த்தித்துக் கொண்டு, நல்ல மனம் என்றென்றும் நன்றாகவே வாழும் என்ற உண்மையையும் கணவர் உருவத்தில் உணர்ந்தார். கவலைகள் விலகி மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது சபீராவுக்கு.

# நிறைகுடம் என்றுமே தளும்புவதில்லை



தந்தையர் தினம்
21 ஜூன் 2020

அப்பாதான் குடும்பத்தின் அத்திவாரம்
அதனாலே அவர்கையில் அதிகாரம்
அப்பாவைத் தப்பாக எண்ணுகின்ற
அன்பிலாப் பிள்ளைகளுக்கவர் அதிகாரி
எப்போதும் அப்பாவின் அறிவுரைகள்
ஏற்றம்தரும் வாழ்வுக்கு அணிகலன்கள்
முப்போதும் பிள்ளைகளின் நலன்காக்க
முனைப்போடு உழைப்பவர்தான் அப்பா!

பிள்ளைபிறந்த காலம் தொடக்கம்
பித்துப் பிடித்தவன்போல் ஓடியோடி
கொள்ளை ஆசைகளை மனதில்தேக்கி
கொஞ்சும் பிள்ளையின் நலன்காக்க
வெள்ளை உள்ளம் கொண்ட அப்பா
வெறிகொண்டு நாளும் உழைப்பான்
கள்ளையுண்டு காணும் மயக்கம் பிள்ளை
கனிமொழி கேட்டால் மகிழ்வான்!

ஐந்து வயதில் பள்ளியில் சேர்த்து
அகரம் சொல்வதை அழகுடன் பார்த்து
செந்தமிழோடு ஆங்கிலக் கல்வியும்
செழிப்பான கலைகளும் பயின்றவர்
சிந்தனைத் தெளிவுடன் உயரக்கண்டு
சிலிர்க்கும் மெய்யுடன் மனம் மகிழும்
வந்தனைக் குரியவர் அப்பர் அவரை
வாழ்த்துதல் தப்பா மண்ணில்?

ஆணோ? பெண்ணோ? அவர்கள் வாழ்வு
அப்பா உள்ளவரை அவர்தம் கனவு
வீணோ என்றெதையும் தவிர்த்திடாதிங்கு
விரும்பியவாறே செய்து முடிப்பார்
தூணோ இவரென எண்ணும் வகையில்
துன்பச் சுமைகளைத் தாங்கியே நிற்பார்
பேணோ மிவரைமண்ணில் பிள்ளை
பெற்றதனாலே பெருமைகள் இழப்பார்!

பத்து மாதங்கள் சுமப்பவள் அம்மா
பல்லாண்டு பாசமுடன் சுமப்பவரப்பா
சொத்துசுகமுடன் மண்ணில் வாழ்வதாலும்
சோற்றுக்கே வழியின்றித் தாழ்ந்தாலும்
முத்துக்களா யெண்ணும் பிள்ளைகளுக்காய்
முதுகுநோக உழைப்பார் அப்பர்
வித்துமவனே விடியலைத் தருபவரவரே
விளைநிலமாய் பிள்ளையைக் கொள்பவரவரே!

அச்சமின்றி பிள்ளைகள் அகிலத்தில்வாழவும்
அறிவுடையோராய் அவர் அகிலமாளவும்
உச்சம் பெற்றவர் உவகையில் மூழ்கவும்
உழைப்பைத் தந்தே உயர்வாரப்பா
இச்சகத்திலே இறைவனுக்கு இணையோன்
இடியுடன் மழை பெய்து மண்வீழ்ந்தாலும்
நிச்சயம் வளம்பெறும் வையகமாமே
நிறைகுடம் என்றுமே தளும்புவதில்லை!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

Alexander Immigration Services
Hemalatha K. Alexander, RCIC
Commissioner of Oaths
Canadian Government Licensed Immigration Consultant

- Express Entry
- Study Permit
- Visitor Visa
- Super Visa
- Citizenship
- LIMA & work Permit**
- Federal Skilled Workers
- Federal skilled Trades
- Canadian Exp. Class
- Business Immigration
- Provincial Nomination
- Family Sponsorship
- Visa extensions, renewal & more service

நிரந்தர குடியிருப்பு, விசா, குடியுரிமை
மற்றும் பல சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
ஆலோசனைக்கு இன்றே அழையுங்கள்
647-773-3673
email: info@alexanderimmigration.ca
web: www.alexanderimmigration.ca

வசதியான புதிய முகவரியில்

GTA Square
5215 Finch Ave. East Suite 261,
Toronto ON M1S 0C2

10 Milner Business Court
Suite 300,
Toronto, ON M1B 3C2

** Kindly note we do not provide Canadian jobs

# Oh My கடவுளே - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

நண்பர்கள் காதலர்களாவதும் கல்யாணத்திற்குப் பிறகு காதல் வருவதுமான கதைகளுடன் நிறையப் படங்கள் வந்துள்ளன. 2020ஆம் ஆண்டில் வெளிவந்த படமான Oh My கடவுளேயில் வித்தியாசமாக விவாகரத்துக்குப் பிறகு காதல் வருவதாகக் காட்டப்படுகிறது.

அர்ஜுன், அனு, மணி என மூன்று நண்பர்கள் இருக்கின்றனர். சிறுவயதில் இருந்தே நண்பர்களான இவர்களில் மணிக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. ஒரு நாள் அனு திடீரென, தன்னைக் கல்யாணம் செய்யுமாறு அர்ஜுனைக் கேட்கிறார். தெரியாத ஒருவரைக் கல்யாணம் செய்வதைவிட தெரிந்த நண்பரைக் கல்யாணம் செய்வதே மேல் என்கிறார்.

அர்ஜுன் அவரை கல்யாணம் செய்ய மறுப்பதற்குக் காரணம் ஒன்றும் இல்லாததால் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறார். பல வருடங்களாக நண்பராக இருந்தவரைக் காதலிக்காமல் திருமணம் செய்ததால் அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு வந்து ஒரு வருடத்தில் திருமணம் விவாகரத்திற்குப் போகிறது. இருவரும் நீதிமன்றத்தில் நிற்கின்றனர்.

இந்த நேரத்தில் அர்ஜுன் தான் அனுவிற்குச் சம்மதம் சொல்லி இருக்கக்கூடாது என்றும் தான் சிறுவயதில் விரும்பிய மீரா என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்திருக்கலாம் எனவும் அவர் நினைக்கிறார். அப்படி ஓர் இரண்டாம் வாய்ப்பை அவருக்குக் கடவுள் கொடுத்தால் என்ன நடக்கும் என்பதுதான் இப்படத்தின் கதை.

அர்ஜுன் அனுவை பிரிந்து மீராவுடன் வாழ்கிறாரா என்பதைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

கடவுள்மீது, அதாவது தலைவிதி என, பலர் தமக்கு நடப்பவற்றிற்குப் பழி போடுகின்றனர். அர்ஜுனும் தன் நிலைக்கும் கடவுளைக் குற்றம் சாட்டுகிறார். ஆனால் கடவுளுக்குப் பதிலளிக்க வாய்ப்புக் கிடைத்தால் என்ன சொல்லுவார்? என இப்படம் காட்டுகிறது. காதல் இல்லாமல், மறுப்பதற்குக் காரணம் இல்லாமல் அனுவைக் கல்யாணம் செய்தது அர்ஜுனின் தவறு என்று கடவுள் கூறுகிறார்.



இதுபோல் அர்ஜுன், அனுவின் தந்தை திருமணத்திற்குப் பிறகு அவருக்குக் கொடுக்கும் வேலையை வெறுக்கிறார். முதலில் அவர் வெறுப்பதற்கான காரணம் ஓரளவிற்குச் சரியாகத் தோன்றினாலும், கதை நகரப் பார்வையாளர்களுக்கும் அர்ஜுனிற்கும் இது தவறு எனத் தெரிய வருகிறது. விரும்பிய வேலையைத் தேடிச் செல்லாதது அவரது தன்னம்பிக்கை இன்மையையும், தன்னை ஒருவரும் ஊக்குவிக்க மாட்டார்கள் என்று அனுமானித்ததுமே காரணம் என இயக்குனர் தெளிவுபடுத்துகிறார். அத்துடன் அனுவின் அப்பா கொடுத்த வேலைக்குப் பின்னால் இருக்கும் ஆழமான கருத்து படத்தில் தெளிவாக விளக்கப்படுகிறது.

படம் முடியும்போது கடவுள் மனிதருக்கு இரண்டாம் வாய்ப்புத் தரத் தேவையில்லை, ஒருவர் தனக்கு இரண்டாம் வாய்ப்பைத் தேட நினைக்கும் போதே அவருக்கு இரண்டாம் வாய்ப்புத் தொடங்குகிறது என்ற கருத்துடன் முடிகிறது.

அர்ஜுன் விவாகரத்துச் செய்து மீராவுடன் போகலாம் அல்லது அனு தன்னை முழுதாகப் புரிந்து வைத்திருந்தும், அவர்களுக்கு இடையே வந்த குழப்பங்கள், தங்களுக்கு இடையே தவறான தகவல் பரிமாற்றத்தாலும், அவருடைய தன்னம்பிக்கை இன்மையாலும், மனத் திருப்தி இன்மையாலும்தான் ஏற்பட்டது என உணர்ந்து அனுவுடன் மீண்டும் சேர்ந்து வாழலாம். அர்ஜுன் இவற்றில் எதைத் தெரிவு செய்கிறார் என படத்தைப் பார்த்து அறியுங்கள்.

# இந்தியாவில்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

நடிக்க எனக்குப் பயமா இருக்கிறது” என்றார். ஆனால், உண்மையான விஷயம், அவர் பயங்கர முன் தயாரிப்போடுதான் படப்பிடிப்பு வருவார். சிவக்குமார் சார்கூட என்னிடம், “நான் ஒரு படத்தில் வழக்கறிஞராக 90 பக்கம் வசனம் பேசினேன்” என்றார். “இதெல்லாம் பெருமையில்லை சார். மொழி தெரியாமல் நீங்களும் நானும் இந்தி படத்தில் ஒரு காட்சிகூட நடிக்க முடியாது. ஆனால், ஜோதிகா எங்கிருந்தோ வந்து நம் தமிழ் நடிகையாகி, தமிழைக் கற்றுக்கொண்டு பேசுவதுதான் பெரிய விஷயம்” என்றேன். அதுவும் ஒரே டேக்கில் ஒகே வாங்குவார். இந்தக் கதாபாத்திரம் பலமானது. அவ்வளவு கவனமாகவும் அர்ப்பணிப்போடும் நடித்தார்.

பொதுவாகவே ஒரு குடும்பப் பெண்ணிற்கு நிறைய பொறுப்புகளும் பிரச்சினைகளும் இருக்கும். ஜோதிகாவுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. கணவரையும் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுவும், சூர்யா குடும்பமே பெரிய குடும்பம். படப்பிடிப்பு வந்தால் கைபேசியை தொட மாட்டார். உணவு இடைவெளியில் அவரது கேரவனுக்குள் சென்றுவிடுவார். அப்போது வீட்டிற்குப் பேசினாரா அலைப்பேசியை எடுத்தாரா என்பதெல்லாம் தெரியாது. ஆனால், படப்பிடிப்பு இடத்தில் ஒரு தடவைகூடக் கைபேசியை எடுத்தது கிடையாது. எல்லோரிடமும் மிகவும் நட்பாகப் பழகுவார். அவர் நடிப்பைப் பார்த்து காட்சி முடிந்ததும் ஒவ்வொரு முறையும் கைதட்டுவார்கள்.

**படத்திற்குக் கிடைத்த முக்கியமான பாராட்டாக நீங்கள் கருதுவது?**

“உங்கள் நடிப்பைப் பார்த்தால், 1960களில் நடித்த சார்லஸ் லாக்டன் ஹாலிவுட் நடிகர் போல் உள்ளது” என்று பெருமையோடு சொன்னார் சிவக்குமார் சார். இப்படி நிறையப் பேர் பாராட்டினர். சமூக வலைத்தளங்களை ஓப்பன் செய்தாலே பாராட்டிக் கொண்டாடுகின்றனர். ஆனால், இவ்வளவு பாராட்டை நான் எதிர்பார்க்கவில்லை. படம் வெளியான இரண்டே நாளில் இரண்டரை கோடி மக்கள் பார்த்துள்ளனர். முதல் ஓடிடி படம்



என்பதால் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது

**திரையரங்கத்தில் வெளியாகாமல் ஓடிடி மூலம் வெளியாகியிருக்கும் முதல் தமிழ்ப் படம் இது. திரையரங்கு உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனரே, நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

கருத்து சுதந்திரம் மாதிரியே தொழில் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. நான் ஒரு படம் எடுத்தால், அதை எப்படி வேண்டுமென்றாலும் வெளியிட எனக்கு உரிமை உள்ளது. பயாஸ்கோப் மாதிரிக்கூட சாலையில் காட்டலாம். இந்த சுதந்திரத்தை யாரும் மறுக்கக்கூடாது. இதை ஆதரித்ததற்கு நீங்க எப்படி இப்படி சொல்லலாம் என்று பலர் எனக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். திரையரங்கம் என்பது அழியவே அழியாது. அமெரிக்காவில் இந்த ஓடிடி ஃப்ளாட்பார்ம் என்பது ரொம்ப வருஷமாகவே இருக்கிறது. ஆனால், அங்கு திரையரங்கத்திலும் பார்க்கின்றனர். அதற்குத் தனி பார்வையாளர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்தியாவில் 68 கோடி பேர் அடுத்தமாதம் பாதிக்கப்படப் போகிறார்கள் என்று சொல்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அப்படி இருக்கையில், ஏதோ ஒரு வகையில் மக்களும் பொழுதுபோக்கோடு இருப்பதற்கும், இது தேவையான விஷயம்.

**குழந்தைகளுக்கெதிரான பாலியல் வன்புணர்வு குறித்துப் படம் பேசுகிறது. இந்தப் பிரச்சினை பற்றிய உங்களது தனிப்பட்ட பார்வை என்ன?**

இதற்கு, உடனடி தண்டனையாக எல்லோரும் ‘நடுரோட்டில் வெட்டணும்’ என்கிறார்கள். அரபு நாடுகளில் அப்படித்தான் தண்டனை கொடுக்கப்படுகிறது. இங்கும், அப்படித்தான் பண்ண வேண்டும். கொஞ்சம் விட்டால் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி வெளியில் வந்துவிடுகின்றனர். இனிமேலும் யாரும் பாதிக்கப்படக்கூடாது. ஒரு குழந்தையை எப்படி அவனால் அணுக முடிகிறது. யோசித்துப் பார்த்தாலே அருவருப்பாக உள்ளது.

எனக்கும் பெண் குழந்தைகள் உள்ளனர். ஒரு குழந்தையைத் தவறாகப் பார்த்தால் கண்டிப்பாக அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். குழந்தையில் பெண் குழந்தை, ஆண் குழந்தை என்றில்லை. எல்லோரும் சமமானோர்தான். அது வளரும் சூழல்தான் எல்லாமே மாறிப் போய்விடுகிறது. இன்று இருக்கும் சமூக வலைதளங்களில் குழந்தைகள் துல்லியமாக எல்லா அருவருப்பையும் பார்க்க வாய்ப்பு வந்துவிட்டது. சாதாரணமாகவே, ஒரு பருவ வயதில் இருப்போர் தவறு செய்ய வாய்ப்பாக உள்ளது. எல்லா விஷயங்களும் திறந்துபோட்டதால் சரியா தவறா என்று தெரியவில்லை. இது எல்லாம் தனித்தனியாகப் பேசுவதற்குப் பதில் மொத்தமாகப் படம் பேசுகிறது. நான் சொன்னால் என்ன ஜோதிகா சொன்னால் என்ன?

**ஊரடங்கு நாட்கள் உங்களுக்கு எப்படி இருந்தது?**

நான் ஏற்கனவே, படப்பிடிப்பு நேரம் தவிர்த்து கொஞ்சம் உள்ளடங்கி இருக்கும் ஆள்தான். உடற்பயிற்சிகள் செய்வதோடு நல்ல உணவுக் கட்டுப்பாடுடன் இருக்கிறேன். புத்தகம் படிக்கிறேன். கொஞ்சம் நேரம் மௌனம் காக்கிறேன். தினமும் ஒரு படம் பார்க்கிறேன். அதோடு, புதிய புதிய கதைகள் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ‘பொன்மகள் வந்தாள்’ படத்திற்காக பாராட்டாக வாங்கிக்கொண்டிருக்கிறேன்.

ஆனாலும், தினந்தோறும் சம்பாதித்துப் பிழைக்கும் மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியிருப்பதுதான் எனக்கு வேதனையைக் கொடுக்கிறது. ஒரு பன்-ஐகூட வாங்கித் தின்னமுடியாமல் வறுமையில் இருப்போர் குறித்துத்தான் எனது கவலையெல்லாம். இந்த நிலை தொடர்ச்சியாக இருந்து கொண்டேதான் இருக்கும். தீர்வு என்றால் கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிப்பதுதான். அதற்கு இன்னும் ஆறு மாதம் அல்லது அதிகமாகக்கூட ஆகலாம். இந்தியாவில் இருவரில் ஒருவருக்குக் கண்டிப்பாக கொரோனா வர வாய்ப்புள்ளது.

**உங்கள் அடுத்த முயற்சியான ‘இரவின் நிழல்’ படம் எந்த நிலையில் உள்ளது?**

அது கதையாகத்தான் இன்னும் உள்ளது. அதற்குள் கொரோனா வந்துவிட்டது.

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

**$2,409**

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS


**416.298.2777**

**$375 Mo.**

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
www.vanyhomes.ca
www.vjsfinancial.ca
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ஜெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்